பக்கங்கள்: பத்து

'stered as a News paper in Sri Lanka





வலம்புரி

VALAMPURI

விலை ரூபா.7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | சித்திரை 29 | செவ்வாய்க்கிழமை | (11-05-2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 144

# நோர்வே வெளிவிவகார அமைச்சர் தலைவர் பிரபாவுடன் இன்று சந்திப்பு



(நமது நிருபர்)

**இடைநிறுத்தப்பட்டிருந்த சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்கும் நோக்குடன் நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன் இன்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.**



ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சி அமைத்தபின் இடைநிறுத்தப்பட்டிருந்த சமாதானப் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிப்பதற்கு நோர்வேயை மத்தியஸ்தம் வகிப்பதற்கான அழைப்பை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா விடுத்திருந்தார்.

ஜனாதிபதியின் அழைப்பை ஏற்று இலங்கை வந்திருந்த நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக்சோல் ஹெய்ம் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கர் ஆகியோர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவையும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியபின் வன்னி சென்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்தித்திருந்தனர்.

இந்தச சந்திப்பில் சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான பச்சைக் கொடியை விடுதலைப் புலிகள் காட்டியதைத் தொடர்ந்து நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன் பிரதி அமைச்சர் விடார் ஹெல்கீசன் சகிதம் நேற்று கொழும்பு வந்து பிரதமருடனும் ஜனாதிபதியுடனும் பேச்சுக்கள் நடத்தியபின் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை இன்று சந்தித்து சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பதற்கான விடயங்கள் குறித்து முக்கிய கலந்துரையாடலை மேற்கொள்ளவுள்ளனர்.

தலைவர் பிரபாகரனுடனான இன்றைய சந்திப்பில் சமாதானப் பேச்சுவா[illegible] தொடர்பாகப் பிரதமருடனும் ஜனாதிபதியுடனும் நேற்று நடத்திய பேச்சுக்களின் விபரங்களை எடுத்து விளக்கிக் கூறுவாரென நோர்வேத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது இவ்வாறிருக்க அரசுடன் ஆரம்பிக்கப்படவுள்ள சமாதானப் பேச்சுக்கள் குறித்த வியூகங்களைத் தலைவர் பிரபாகரனுடன் கலந்தாலோசித்து வகுப்பதற்காக

(10ஆம் பக்கம் பார்க்க)

# சமாதானப் பேச்சுக்கள் ஜூலை மாத இறுதியில்

## பிரதமர் மஹிந்த அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக இடைநிறுத்தப்பட்டிருந்த அரசு-விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஜூலை மாத இறுதியில் ஆரம்பிக்கப் படலாமென்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இடைநிறுத்தப்பட்டிருந்த சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்காக முனைப்புடன் செயற்பட்டுவரும் நோர்வே நாட்டின் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன்னுடனான நேற்றைய சந்திப்பினையடுத்து கருத்து வெளியிடுகையிலேயே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்கும் நோக்குடன் நேற்று இலங்கை வந்திருந்த நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன்னும் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசனும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவையும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவையும் சந்தித்து சமாதான முயறசிகளை ஆரம்பிப்பது குறித்தும் நோர்வே வழங்கவுள்ள அனுசரணை குறித்தும் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

பிரதமருடனான நோர்வே வெளிவிவகார அமைச்சரின் சந்திப்பு நேற்றுப் பிற்பகல் 4.40 மணியளவில் பிரதமரின் வாசஸ்தலத்தில் இடம்பெற்றது.

நேற்றைய சந்திப்பில் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ள பேச்சுவார்த்தைகளின் போது எழக்கூடிய தடைகள், அத்தடைகளைக் கையாளும்

(10ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.தே.க.பாராளுமன்றக் குழு ரணில் தலைமையில் கூடியது

## கட்சியை மீளமைக்க யோசனை முன்வைப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியை மீளமைப்பதற்கான யோசனைகளை அக் கட்சியின் தலைவர் ரணில விக்கிரமசிங்க கட்சியின் பாராளுமன்றக் குழுக்கூட்டத்தில் முன்வைத்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்றக் குழுக்கூட்டம் பாராளுமனறக் கட்டடத் தொகுதியில் நேற்று நடைபெற்றது. கடந்த 28 ஆம் திகதி நடைபெற்ற பாராளுமன்ற குழுக் கூட்டத்தில் கட்சி மீளமைப்பது தொடர்பான ஆலோசனைகளை முன வைக்குமாறு, ஐக்கிய தேசியக் கடசியன் தலைவர் சகல பாராளுமன்ற உறுப்பினர்களிடம் கேட்டிருந்தார்.

இதற்கமைய முன்வைக்கப்பட்ட யோசனைகளை அவர் நேற்று பாராளுமன்ற குழுக்கூட்டத்தில் முன்வைத்ததாக ஐக்கிய தேசியக்

(10ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுதங்களுடன் 3இளைஞர் கைது

(மட்டக்களப்பு)

ஆயுதங்கள் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் மூவர் நேற்று ஏறாவூரில் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடம் இருந்து கைத்துப்பாக்கியொன்றும் தோட்டாக்கள் எட்டும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சநதேக நபர்கள் ஏறாவூர் பொலிஸாரினால் மட்டக்களப்பு மாவட்ட பதில் நீதிவான் சின்னையா முன்நிலையில் நேற்று ஆஜர் செய்யப்பட்டனர். சந்தேக நபர்களை எதிர்வரும் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ச)

# கிழக்குமாகாண கொலைச் சம்பவங்கள்; கொலையாளிகளுக்கு ஆதரவு வழங்குவது மிகவும் பாரதூரமான குற்றச் செயலாகும்

## கண்காணிப்புக்குழுத் தலைவர் அறிக்கை

(கொழும்பு)

கிழக்குமாகாணத்தில் அண்மையில் நடைபெற்ற கொலைகளுடன் தொடர்புடையவர்களை அடையாளங்கண்டு கைது செய்வதற்கு அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் இணைந்து செயற்பட வேண்டும்.

இவ்வாறு இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரொன் பியுறுஹெவ்டே தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

கிழக்கு மாகாணத்தில் அண்மைக்கால்மாக இடம் பெற்றுவரும் கொலைச் சம்பவங்கள் மீண்டும் மீண்டும் இடம்பெறாமல் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவது அவசியமாகும்.

கடந்தமாதம் 25ஆம் திகதிக்குப் பின்னர் கிழக்கு மாகாணத்தில் இதுவரை 15 கொலைகள் இடம் பெற்றிருக்கின்றன.

இலங்கையின் ஜனநாயக அபிவிருத்திக்கும், சுபீட்சத்திற்கும், சமாதான முயற்சிக்குமான அடித்தளங்களை நோக்கி நேரடியாக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்

(10ஆம் பக்கம் பார்க்க)

## சமுர்த்தி அலுவலர் சடலமாக மீட்பு

(பருத்தித்துறை)

சமுர்த்தி உத்தியோகத்தர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டு மந்திகை மருத்துவ மனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் அல்வாய்ப் பகுதியில் இடம் பெற்ற இச் சம்பவத்தில் புற்றளை புலோலியில் வசித்துவந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான செல்லையா லோகநாதன் (வயது42) என்பவரே உயிரிழந்தவராவார்.

பிரஸ்தாப நபர் வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டதாகத் தெரியவருகிறது. பிரேத பரிசோதனையில் மூச்சுத் திணறலால் ஏற்பட்ட மரணமெனத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

(த-52,150)

# சயனைட் அருந்திய இளம் பெண் மரணம்!

(யாழ்ப்பாணம்)

சயனைட் அருந்தியதாகத் தெரிவித்து மயக்கமடைந்த நிலையில் நேற்றுக் காலை யாழ்.போதனா வைததியசாலையில் சேர்க்கப்படட இளம் குடும்பப் பெண் ஒருவர் சில மணி நேரத்தில் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் கொட்டடியல் நேற்றுக் காலை 6.30 மணியளவில் இடம்பெற்ற இச் சமபவத்தில் அதேயிடத்தைச் சேர்ந்த எம்சுகிர்தமாலா(வயது28) என்பவரே உயிரிழந்தவராவார்.

விஷம் அருந்தியதால் மயக்கமடைந்த பிரஸ்தாபப் பெண் உடனடியாக யாழ்.போதானா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். பிரஸ்தாபப் பெண் உயிரிழந்தமைக்குக் காரணம் சயனைட்தானா என்பதைக் கண்டறிய இரதத மாதிரி பெறப்பட்டு பரிசோதனைககாக

(10 ஆம் பக்கம் பார்க்க)

## படையினர் தீவிர சோதனை

(மட்டக்களப்பு)

தாண்டவன் வெளிச் சந்தியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் மற்றும் கோவிந்தன் வீதி விசேட அதிரடிப்படை முகாம் மீதான கைக்குண்டுவீச்சுச் சம்பவம் ஆகியவற்றைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது.

கல்முனை வாடிவீட்டுச் சந்தி மற்றும் வைத்தியசாலை வீதிச் சந்தி ஆகிய இடங்களில் பொலிஸார்

(10ஆம் பக்கம் பார்க்க)

# மட்டு.இராணுவ அதிகாரிகளும் தளபதி ரமேஷும் இன்று சந்திப்பு

(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டங்களின் சிறப்புத்தளபதி ரமேஷ் மற்றும் அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன்ஆகியோருக்கும் மட்டக்களப்பு மாவட்ட இராணுவ அதிகாரிகளுக்குமிடையில் இன்று சந்திப்பு ஒன்று இடம் பெறவுள்ளது.

இன்று மு.ப.11மணிக்கு யுத்த நிறுத்தக் கண்காணிப்பாளர்கள் முன்னிலையில் வவுணதீவு பிரதேச செயலகத்தில் இச்சந்திப்பு இடம் பெறும்.

இராணுவத்தரப்பில் 23ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி பிரிகேடியர் வஜிர விஜயகுணவர்த்தனாவும் மற்றும் சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளும் கலந்து கொள்வர்.

கிழக்கு மாகாணத்தில் சுமுக நிலையைக் கொண்டுவருவது

(10ஆம் பக்கம் பார்க்க)

# இடைவிலகிய மாணவர் மறுவாழ்வுத் திட்டம்

## துரிதமாக அமுல்படுத்தத் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில்பாடசாலையை விட்டு "இடை விலகிய மாணவர்களுக்கான மறுவாழ்வுத் திட்டம்'' அமுல்படுத்தப்படவுள்ளது.

இத்திட்டத்தினை நல்ல முறையில் நடைமுறைப்படுத்துவது தொடர்பான கூட்டம் நேற்று முன்தினம் யாழ். கல்வித் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் திட்ட இணைப்பாளர் த. பஞ்சலிங்கம் தலைமையில் இடம்பெற்றது.

இதில்,வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,தமிழர் புனர் வாழ்வுக் கழக இணைப்பாளர் ஜெயராஜா, யுனிசெவ் யாழ். மாவட்ட வதிவிடப் பிரதி நிதி றோசானா ஆகியோர் கலந்து கொண்டனர்.

யாழ்.மாவட்டத்தில் இடைவிலகிய 2ஆயிரத்து 275மாணவர்களும் படிப்பைக் கைவிடக் காரணங்கள் யாவை எனக் கண்டறியப்பட்டு, அவற்றை நிவிர்த்திப்பது தொடர்பில் இக் கூட்டத்தில் ஆராயப்பட்டதுடன்,இது தொடர்பில் விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்களை வெளியிடுவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்த வகையில் துண்டுப் பிரசுரங்களை வெளியிடும் பொறுப்பை தமிழர் புனர் வாழ்வுக் கழகம் ஏற்றுள்ளது.

இது தவிர விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதத்தில் மாணவர்கள் மத்தியில் நாடகம், சித்திரம் ஆகிய போட்டிகளை நடாத்துவதெனவும் யாழ்.மாவட்டத்தில் உள்ள 5 வலயங்களிலும் அந்தந்த வலயக் கல்வப் பணிப்பாளர்கள் தலைமையில் நிர்வாகக் குழுககளை அமைத்து இது தொடர்பான திட்டங்களை முன்னெடுப்பது எனவும் தீர்மானிக்கபபட்டது. இதேவேளை, யாழ். மாவட்டத்தில் உள்ள 410 பாடசாலைகளிலும் எதிர் வரும ஜுன் மாதம் 7ஆம் திகதி முதல் 11ஆம் திகதி வரை விழிப்புணர்வு வாரம் அனுட்டிக்கப்படவுள்ளது.இதேவேளை, மேற்படி விழிப் புணர்வு நடவடிக்கைகளில் யுனிசெவ் அமைப்பும் ஈடுபட விருப்பதாகத் தெரிவிக் கப்படுகிறது. (உ-16)


மீண்டும் உங்கள் வலம்புரியில்

விவாத அரங்கு

விடயம்

தொலைக்காட்சியில் தொடராக இடம் பெறும் நாடகங்களினால் யாழ்ப்பாணக் குடும்ப-சமூக கலாசார பண்பாட்டு உறவுகள்

பலப்படுகின்றது

பலவீனப்படுகின்றது

உங்கள் கருத்துக்களை

விவாத அரங்கு
வலம்புரி
இல.15, வெள்ளாந்தெரு
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு விரைவாக அனுப்பிவையுங்கள்




பாங்காய் பள்ளி செல்லும் பராயத்தில் மாங்காய் விற்கும் சிறுவன் இவன். சிறார்களின் உரிமை பற்றிப் பேசும் அமைப்புக்களே! உங்கள் பார்வையைச் சற்று இவனையும் நோக்கித் திருப்புங்களேன்.

(படம்:- க.பவன்)

# குற்றங்களுக்கான தண்டனை வழங்கும் பொறுப்பு பொது மக்களுக்குக் கிடையாது

## நீதிவான் திருமதி இளங்கோவன்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் சட்டதிட்டங்கள் சீரில்லாமல் இருப்பதன் காணரமாகக் குற்றச் செயல்கள் அதிகரித்து வருகின்றன. நாம் எல்லோரும் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு வாழப்பழகிக் கொள்ளவேண்டும். இன்றைய நிலையில் எமது மாணவர்கள் வீதிகளில் சைக்கிள்களில் சமாந்தரமாகச் செல்கின்றனர். இதனால் வீதி விபத்துக்கள் அடிக்கடி இடம் பெற்று வருகின்றன.

எமது மாணவர்கள் நாட்டின் சட்டதிட்டங்களுக்கு அமைவாக நடப்பதை பெற்றோர்களும் ஆசிரியர்களும் பார்த்துக் கொள்ளவேண்டும். வேண்டிய அறிவுரைகளை வழங்க வேண்டும். நாம் சட்ட திட்டங்களை மதியாமல் நடந்து கொண்டபின் ஆபத்துக்கள் வந்த பின்னர் விபத்துக்களை ஏற்படுத்துவோர் மீது குற்றம்குறைகளைக் கண்டு அவர்களைத் தண்டிக்கக் கூடாது.

மல்லாகம் மாவட்ட நீதிவான் திருமதி சரோயினிதேவி இளங்கோவன் யாழ்ப்பாணம் செஞ்சிலுவைச் சங்கத்தில் கடந்த சனியன்று நடைபெற்ற உலக செஞ்சிலுவைத் தினத்தில் பிரதம விருந்தினராகப் பங்கு கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

சங்கத்தின் தலைவர் வைத்திய கலாநிதி வீ.தியாகராஜா தலைமையில் நடைபெற்ற இந் நிக்ழ்வில் மாவட்ட நீதிவான் தொடர்ந்து உரையாற்றும் போது,

குற்றங்கள் இடம்பெற்றால் அவற்றிற்கான தண்டணைகளை வழங்குவதற்குப் பொதுமக்களுக்கு எத்தகைய உரிமைகளும் இல்லை. குற்றமிழைப்பவர்களுக்கான தண்டனைகளை வழங்குவதற்கு நீதிமன்றங்கள் இருக்கின்றன.

நாட்டில் சட்ட திட்டங்களைக் கண்காணிப்பதற்கு பொலிஸாரும் தண்டனைகளை வழங்குவதற்கு நீதிமன்றங்களும் இருக்கின்றன. வீதிகளில் செல்வோர் வீதி ஒழுங்கு முறைகளைக் கடைப்பிடிதது நடக்கவேண்டியது அவசியமாகும் எனக் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் அதிதியுரை வழங்கிய யாழ். மத்திய கல்லூரி அதிபர் க. இராஜதுரை குறிப்பிடும்போது,

எமது இளைஞர்களைப் பார்த்து நாம் குற்றவாளிகள் என குற்றம் சாட்டிக்கொண்டு இளைஞர்கள் பாதை தவறிப் போகின்றார்கள் எனக் குறை சொல்வதில் அர்த்தமில்லை. மேலைத்தேசக் கலாசாரப்படி இங்கு யாவும் நிகழவேண்டும் என்று எதிர்பார்ப்பது தவறு. நாம் எமது கலைகலாசார பண்பாட்டு விழுமியங்களைப் பேணிப் பாதுகாக்கவேண்டும்.

மேலை நாடுகளில் இருக்கக் கூடிய அத்தனை சட்ட திட்டங்களும் எமது பிரதேசத்துக்குப பொருத்தப்பாடானதாக இருக்கமாட்டாது. எமது நாட்டின் சட்டதிட்டங்களை நாம் மதித்து வாழ வேண்டும். எமது சமுதாயத்தில் மனித உரிமைகள், சிறுவர் உரிமைகள், பெண்கள் உரிமைகளை நாம் மதித்து வாழப் பழக வேண்டும் என்றார்.

இந்நிகழ்வில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். வதிவிடப் பிரதிநிதி செல்வி வேராறடோவிற்கும் உரையாற்றினார். (உ-16)

# கைதிகள் சிகிச்சை பெற விசேட வைத்தியப் பிரிவு

(கொழும்பு)

குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்கள் என்ற பெயரில் கைது செய்யப்படும் சந்தேக நபர்கள், நோய்வாய்ப்படும் போது அவர்களைப பராமரிப்பதற்கென வைத்தியசாலைகளில் விசேட வைத்தியப் பிரிவு ஒன்றை அமைப்பது பற்றி ஆலோசிக்கபபட்டு வருவதாகப் பொலிஸ்மா அதிபர் இந்திரா டி சில்வா தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கைதிகளுக்கென பாதுகாப்பான சிகிச்சைப் பிரிவுகள் இன்மையால் வைத்திய சாலைகளில் தங்கவைகக்கப்படும் நோயாளிகள் பல்வேறு அபாயங்களையும் எதிர்கொள்கின்றனர்.

எனினும், பொதுமக்கள் சிகிச்சை பெற்றுவரும் விடுதிகளிலேயே கைதிகளும் சிகிச்சை பெற்று வருவதால் அங்கு பொலிஸார் தமது பாதுகாப்புக் கடமைகளை சரிவரச் செய்து கொள்ளமுடியாத நிலை காணப்படுகிறது. இதனைக் கருத்தில் கொண்டே, கைதிகளுக்கான பாதுகாப்புகளுடன் கூடிய விசேட வைத்தியப் பிரிவுகளை நாட் டில் உள்ள சகல வைத்திய சாலைகளிலும் அமைக்கத் திட்டமிடப்பட்டு வருவதாக பொலிஸ்மா அதிபர் மேலும் தெரிவித்தார். (உ-3,60)

## உணவுப்பொருட்கள் அழிப்பு

சுண்டுக்குளிப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் மனித பாவனைக்கு உதவாத உணவுப் பணடங்கள் விற்பனை செய்யப்படு வதாகக் கிடைத்த தகவல் ஒன்றின்பேரில் குறிப்பிட்ட நிலையத்தில் திடீர் பரிசோதனை மேற்கொண்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் குழு அங்கு பாவனைத் திகதி முடிவடைந்த பலவிதமான உணவுப்பொருட்களைக் கைப்பற்றி உரிமையாளரின் சம்மதத்துடன் அழித் துள்ளது. இப்பொருட்களில் பிஸ்கட், கோப்பிகுளுக் கோஸ், கன்டோஸ், அரிசிமா, பால்மா, சோயாட் பக்கற் போன்றவைஅடங்கும். (உ)





ஜப்பானில் இருந்து வெளிவரும் மைனிச்சி எனும் பத்திரிகை நிறுவனத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர் ஹனோக்கா ஜேஜி வலம்புரி அலுவலகத்திற்கு நேற்று விஜயம் செய்த போது பிடிக்கப்பட்ட படங்கள்.

# திருவாவடுதுறை ஆதீனம் கௌரவித்த ஈழத்து பண்ணிசைக் கலைஞர் கலாபூஷணம் திருஞானசம்பந்தன்

கே. சி. சிவகுமாரன்
(யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி)



தென்னிந்தியாவில் பாரம்பரியம் மிக்கதும் முக்கியத்துவம் வாய்ந்ததுமாகக் கருதப்படுவதுமான திருவாவடுதுறை ஆதீனம் அண்மையில் ஈழத்தின் தலைசிறந்த பண்ணிசைக் கலைஞர் பண்ணிசை வேந்தர் தாவடியூர் கே.எஸ்.ஆர். திருஞானசம்பந்தன் அவர்கட்கு அருள்திரு நமச்சிவாய மூர்த்திகள் ஆசிக் கவசமான பட்டாடை போர்த்தி பெறுமதிமிக்க பவித்திரம் (மோதிரம்) அணிவித்து மூவாயிரம் ரூபா இந்தியப் பெறுமதியான பொற்கிழியும் வழங்கி கௌரவித்தது.

வருடம்தோறும் தென்னிந்திய நாகை மாவட்டத்தில் உள்ள திருவாவடுதுறை ஆதினத்தில் நடைபெறும் அதன் 22வது குரு மகா சன்னிதானம் அருள் திரு அம்பலவாண தேசிக மூர்த்திகளது. குரு பூசையின்போது இந்து சமயத்திற்கு அரும்பணியாற்றிய அவர்களைத் தெரிவு செய்து மேற்படி கௌரவம் வழங்கப்படுகிறது. இந்த வரிசையில் இந்த வருடம் ஈழத்தில் இருந்து திருஞானசம்பந்தன் தெரிவு செய்யப்பட்டார்கள்.

1985 ஆம் ஆண்டிலிருந்து இடம் பெறும் இந்த நிகழ்ச்சி பேராசிரியர்கள், பெரும் அறிஞர்கள், ஆதீன முதல்வர்கள், ஓதுவார் மூர்த்திகள் முன்னிலையில் நடைபெற்று வருகிறது. 2000இல் காஞ்சிபுரம் ஆ.விநாயகம் முதலியாரும் 2001இல் திருப்புகலூர் அ. அருணாசலம் தேசிகரும் 2002இல் திருவடை மருதூர் ச.சம்பந்த தேசிகரும் இவ் விருதைப் பெற்றுள்ளனர்.

## ஈழத்தவருக்கு விருது

தென்னித்தியாவில் தலைசிறந்த ஓதுவாரும், பல பண்ணிசை ஒலிப்பேழைகளை வெளியிட்டவருமான தருமபுரம் ப.சுவாமிநாதன் சென்ற வருடம் இவ் விருதைப் பெறக்கூடிதாக இருந்தது. இவ்வருடம் ஈழத்தவருக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளமை மிகப் பெருமை மிக்கதாகக் கருதலாம்.

1975இல் நல்ல ஆதீனம் முதலாவது குருமகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரியார், காலத்தில் திருஞான சம்பந்தன் ஓதுவாராக இருந்த போது அங்கு பண்ணிசைப் புலவர், பண்ணிசை வேந்தர் என்ற பட்டங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

1982இல் பேராசிரியர் க.வெள்ளைவாரணன் முன்னிலையில் பரீட்சிக்கப்பட்டு, தென்னிந்திய திருப்பனந்தாள ஆதீனத்தால் "தேவார இசை மணி" என்ற பட்டம் வழங்கப் பெற்றார். கே.எஸ்.ஆர். திருஞான சமபந்தன் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளால் பாராட்டப் பெற்ற இவருக்கு இந்து கலாசார அமைச்சு "கலாபூஷணம்" விருதை 2002இல் வழங்கியது.

சம்பந்தன் தனது தந்தையார் செ.இராசையாவிடம் கர்நாடக சங்கீதம் வரன் முறையாகக் கற்றுத் தேர்ந்தவர். சைவப் புலவா மணி த.குமாரசாமிப்பிள்ளை, குப்பிளான் செல்லத்துரை ஆகியோரிடம் பண்ணிசை பயின்று தென்னிந்திய ஆதீனத்தில் மேலும் பயிற்சி பெற்றுள்ளார்.

## பண்ணிசைக் கச்சேரி

1978இல் கோலாலம்பூர் ஸ்கொட் றோட் கந்தசுவாமி ஆலய மகா கும்பாபிஷேக நிகழ்வின்போது, இங்கிருந்து அழைக்கப்பட்டு, பண்ணிசைக் கச்சேரி நிகழ்த்திப் பெருமை பெற்றார். இதைத்தொடர்ந்து 7தடவைகள் அங்கு பண்ணிசைக் கச்சேரிக்காக இவர் அழைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தென்னிந்தியக் கலைஞர்களுடன் இணைநது இந்தியாவில் பண்ணிசைக் கச்சேரி நிகழ்த்தக்கூடிய வாய்ப்பு இலகுவில் எல்லோருக்கும் கிட்டிவிடாது. ஆனால் திருஞானசம்பந்தன் கலைமாமணி எஸ்.முத்துக்கந்தசாமி தேசிகர், திருசசி வே.பாலசுப்பிரமணியம ஓதுவார், திருவானைக் கோவல் பாண்டியன் ஓதுவார். வயலூர் திருஞான சம்பந்தம் ஓதுவார், திருந்தணி எஸ்.சாமிநாதன் ஓதுவார், திருமுறைக் கலாநிதி திருவாவடுதுறை து.சோமசுந்தர தேசிகர் போன்ற தென்னிந்திய பிரபல கலைஞர்களுடன் இணைந்து பண்ணிசைக் கச்சேரிகள் நிகழ்த்தியுள்ளார். தென்னக முன்னணி பக்காவத்திய கலைஞர்களான இசைமணி நெல்லை எஸ்.எஸ்.ரெங்கப்பா, சங்கீத பூஷணம் எஸ்.ஏ.கோபாலன், விதது வான் நாகைகணபதி ஐயா், திருச்சி கிருஷ்ணன், தஞ்சாவூர் இராஜேந்திரன், மலைக்கோட்டை ஆறுமுகம் போனறோர், இவரது பண்ணிசைக்கு மெருகூட்டினர். இலங்கையின் பிரபல இசைக்கலைஞர்கள் இவருக்கு பக்கவாத்தியம் வழங்கி வருகின்றனர்.

திருஞானசம்பந்தன் இறைபணியாக பண்ணிசை வகுப்புக்கள் நடாத்தி வருகிறார். நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் இந்து கலாசார அமைச்சின் வழிகாட்டலிலும், கந்தர்மடம் வேதாந்தம் மடத்திலும். அகில இலங்கை திருமுறை மன்றத்திலும், பெருந்தொகையான இளைஞர்கள், முதியோர்கள், குழந்தைகள் பண்ணிசை பயின்று சைவத்தின பெருமையை உணர்ந்து வருகின்றனர்.

## ஒலிப்பேழைகள் வெளியீடு

மேலும், தனது பணியாக பல பண்ணிசை ஒலிப்பேழைகள் வெளியிட்டு வருகிறார். 1999இல் 'தேவார இசை' ஒலிப் பேழைகள் மூன்றும் 2000இல் திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவைப் பாடல்கள் அடங்கிய ஒலிப்பேழைகள் இரண்டும் சென்றவருடம் 'திருமுறைத் தேனமுது' என்ற ஒலிப்பேழைத் தொகுதியில் மூவர் தேவாரங்களையும் வெளியிடடுள்ளார். இவை ஆலயங்களிலும் இந்து வீடுகளிலும் தினமும ஒலித்துக்கொண்டிருக்கின்றன.

17-3-2004இல் திருக்கயிலாயப் பரம்பரை திருவாவடுதுறை ஆதீனத்து 22வது குருமகா சன்னிதானம் அவர்களின் குருபூசையின் போது, தற்போதைய குருமகா சன்னிதானம் சீர்வளர் சீா சிவப்பிரகாச தேசிய பராமச்சாரிய சுவாமிகள் தலைமையில் நிகழ்ந்தபோது கே. எஸ்.ஆர்.திருஞானசம்பந்தன் "திருமுறை விண்ணப்பம் என்ற தலைபபில் பண்ணிசைக் கச்சேரி நிகழ்த்தியுள்ளார். இந்நிகழ்விற்கு தஞ்சை சுப்பிரமணியம் புல்லாங்குழலும், தில்லையாடி மாரியப்பன் மிருதங்கமும் இசைத்துள்ளனர். இதைத் தொடர்ந்து தில்லைச சிதம்பரத்திலும் இவரது பண்ணிசை பல அறிஞர்கள் முன்னிலையில் நிகழ்ந்தது.

இவ்வளவு பெருமைகளையும் தனதாக்கிக்கொண்ட தாவடியூர் கே.எஸ்.ஆர்.திருஞானசம்பந்தன், வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தனத்தின் ஓதுவாராகவும் இறை சேவைபுரிந்து வருகிறார். இவரை சைவ ஆலயங்கள் இன்னும் அதிகமாக பயன்படுத்தினால் பண்ணிசையின் பெருமைகளையும், திருமுறைகளின் மகத்துவத்தையும் அடுத்த சந்ததிக்கு வழங்கிய அரும் பெரும்பணி புரிந்தவர்களாச் சைவ உலகு போற்றும்-இவருக்கு கிடைக்கும் கௌரவமும் பாராட்டும் ஈழதஇல் வாழும் ஒவ்வொரு சைவனுககும் கிடைத்த கௌரவமாகக் கருதிக கொள்ளலாம் என்றால் மிகையாகாது.

# ஐ.தே.க.தலைவர் பதவியில் இருந்து ரணிலை நீக்கும் முயற்சி பிசுபிசுப்பு

ஐ.தே.க.தலைவர் பதவியில் இருந்து ரணில் விக்கிரமசிங்கவை வெளியேற்றும் முயற்சிகள் கடநத வாரம் முளையிலேயே கிள்ளி எறியப்பட்டுள்ளதாகவும் இம் முயற்சிகளின் பின்னணியில் ரெலிக்கொம் தலைவர் திலஙக சுமதிபால இருப்பதாகவும் அறியப்படுகிறது.

ஐ.தே.க.பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சியை மீளக்கட்டியெழுப்புமாறு ரணிலை கோரியதைத் தொடர்நது, அவா் இதுபற்றி பிரதித் தலைவர் கருஜயசூரியாவுடன் கலந்துரையாடிவிட்டு இவ்வாரம் அதனை மேற்கொள்வதாக உறுதியளித்துள்ள நிலையில் இம் முயற்சி இடம்பெற்றுள்ளது.

தற்போது விளக்கமறியலில், இருக்கும் திலஙக சுமதிபால முன்னர் பல ஐ.தே.க.உறுப்பினர்களை ஐ.ம.சு.முதரப்பிற்கு மாறுமாறு ஆதரவு கேட்டிருந்தார். ஆனால், அதற்கு அவருக்கு எவரும் ஆதரவு வழஙகவில்லை. தற்போது திலங்கவை ரெலிகொம் தலைவர் பதவியில் இருந்து விலகுமாறு ஐ.ம.சு.மு. அரசு கோரியுள்ளது.

இதுபற்றி கடந்தவாரம் பிரதி அமைச்சர் அர்ஜுண ரணதுங்க ஜனாதிபதியுடன் கலந்துரையாடியுள்ளார். அதனபடி சுமதிபால தானாக பதவி விலகாவிடின் .அவா பதவி விலக்கப் படுவார் என ஜனாதிபதி அர்ஜுண விடம் தெரிவித்துள்ளார்.

ஐ.தே.முக்குள் சில உறுப்பினர்களை பயன்படுத்தி ரணிலை பதவி விலக்கிவிட்டு, பிரதித் தலைவர் கருஜயசூரியாவை அப்பாவிக்கு நியமிக்க சுமதிபால உறுப்பினர்களின் ஆதரவைக் கோரியிருந்தார். இதுபற்றி தனது உறுப்பினர்கள் மூலமாக ரணில் கேள்விப்பட்டுள்ளார்.

சுமதிபாலவின் திட்டப்படி நடைபெறவுள்ள ஐ.தே.கவின் பாராளுமன்ற குழுவின் கூட்டததில் வைத்து கட்சியின் தலைமைத்துவத்திற்கு தனக்குச் சார்பான ஐ.தே.க.உறுப்பினர்கள் மூலமாக சவால் விடுவது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதைக் கேள்விப்பட்ட தலைமைத்துவம் எந்தச் சவாலையும் சமாளிக்கத் தாம் தயாராக இருப்பது என தீர்மானித்துவிட்டது.

கரு ஜயசூரியாவை கட்சித் தலைவராக நியமிக்க ஆதரவு தெரிவித்துள்ள உறுப்பினர்கள், ரணில்



தொடர்நதும் இந்த மக்களின் ஆதரவினை பெறுவாரா என்பதில் சந்தேகம் தெரிவித்துள்ளனர். ஆனால், இது சில வேளை சிறுபான்மையினா் ஐ.மசு. முவிற்கு பெரும்பான்மை ஆதரவை வழங்க முயற்சிக்க வழிவகுக்கும் என்பதால் இம்முயற்சி நல்லதல்ல. தான் மக்களின் முதுகில் குத்த தயாரில்லை என கருஜயசூரிய தெரிவத்து விட்டார். தொடர்ந்து ரணில - ஜயசூரிய கூட்டணியே இருப்பது என்றும் முடிவுசெய்யப்பட்டுவிட்டது.(உ-6)

# அரசுக்கு ஆதரவு தெரிவிப்பதா? இ.தொ.கவின் முடிவு விரைவில்

(கொழும்பு)

அரசுக்கு ஆதரவு வழக்குவது தொடர்பான கட்சியின் இறுதி முடிவு விரைவில் அறிவிக்கப்படுமென எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய முன்னணியில் அங்கம் வகிக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அறிவித்துள்ளது.

புதிய நாடாளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத் தொடர் எதிர் வரும் 18ஆம் திகதி இடம்பெறவுள்ள நிலையில், இத் திகதிக்கு முன்னரே இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் இறுதி முடிவு வெளியாகும்என நம்பப்படுகிறது.

ஜனாதிபதிக்கும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவா் ஆறுமுகம் தொண்டைமானுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சு வார்ததைகளின் போது, தமது அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கு மாறு ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்திருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் ஜனாதிபதிக்கும், ஆறுமுகம் தொண்டைமானுக்கும் இடையிலான இச்சந்திப்பு தொடர்பாக கருத்து வெளியிட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவர் ஒருவர்,

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் விரைவில் தம்முடன் இணைவதற்கான ஒரு முன்னறிவிப்பே இப்பேச்சுவார்த்தை எனக் கூறியிருந்தார். இது குறித்து இளைஞர் தொழிலாளா காங்கிரஸ் உத்தியோக பூர்வமாகக் கருத்து எதனையும் இதுவரை தொிவிக்காத நிலையில், விரைவில் இந்த விடயம் தொடர்பான காங்கிரஸின் முடிவு வெளியிடப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (உ)

## மேன்முறையீடு

ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் பிரபல பாடசாலைகளில் கல்வி கற்பதற்கான வாய்ப்பு மறுக்கப்பட்டமை தொடர்பான மேன்முறையீடுகள் செய்வதற்கு எதிர் வரும் 14ஆம திகதிவரை கால அவகாசம் வழங்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக ஆயிரத்துக்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக கல்வியமைச்சின பாடசாலை விவகாரப பிரிவின் பணிப்பாளர் நந்தசேன முந்திகல தெரிவிததார். இந்த மேன்முறையீடுகள் தொடர்பாக ஆராய்ந்து குறிப்பிட்ட மாணவர்களை இடவசதியுள்ள பிரபல பாடசாலைகளில் அனுமதிப்பதற்கு ஆலோசித்து வருவதாக அவர் குறிப்பிட்டார். (உ-121)

# எழுத்துமூல உத்தரவாதத்தை நோர்வே கோரியது உண்மையே

இலங்கையின் சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பான எழுத்துமூல உததரவாதம் ஒன்றைத் தருமாறு சிறிலங்கா ஜனாதிபதியிடம் நோர்வே கோரிகைகை விடுத்திருந்ததாக வெளியான செய்திகள் உண்மையானவை என கொழும்பு ஆங்கில வார இதழொன்று தெரிவித்துள்ளது.

சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பது தொடர்பான அரசின் நிலைப்பாட்டை எழுதது மூலத்தில் தருமாறு, நோர்வேயினால் ஜனாதிபதிக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டதாக வெளியான செய்திகளில் எதுவித உண்மையும் இல்லை என ஜனாதிபதி தரப்பினர் மறுத்திருந்தனர்.

இதுகுறித்து ஊடகங்களில் வெளியான தகவல்கள் உண்மைகளுக்குப் புறம்பானவை எனவும் ஜனாதிபதி செயலகம் அறிக்கை யொன்றையும் வெளியிட்டிருந்தது.

இந்நிலையில் இதுகுறித்து நேற்று முன்தினம் கருத்து வெளியிட்டுள்ள கொழும்பு ஆங்கில வார இதழொன்று, ஜனாதிபதியிடம் நோர்வே இத்தகைய உத்தரவாதம் எதனையும் கேட்டிருக்கவில்லையானால், அந்தச் செய்தியை நோர்வே தரப்பே முதலில் மறுத்திருக்கும் எனச் சுட்டிக்காட்டியுள்ளது. (உ)

# பேச்சுக்களில் மு.கா.வை.இணைக்க வேண்டாமென அரசுக்கு அழுத்தம்

(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது முஸ்லிம் காங்கிரஸை இணைத்துக் கொள்ள வேண்டாமென ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சில தரப்பினா அரசுக்கு அழுத்தம் கொடுத்து வருவதாகத் தெரியவந்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான சிறிலங்கா அரசாங்கத்தின் பேச்சுவார்த்தைகளில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸை இணைத்துக்கொள்ளக் கூடாதென ஐக்கிய மக்கள் சுகந்திர முன்னணியின் மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானா தெரிவித்துள்ளார்.

தம்மால் தெரிவு செய்யப்படும் ஒரு பிரதிநிதிகள் குழுவை பேச்சுவார்த்தைகளில் இடம்பெறச் செய்வதற்கான முயற்சிகளை முஸ்லிம் காங்கிரஸ் எடுத்து வருவதாகவும அலவி மௌலானா குற்றம் சாட்டியுள்ளார்.

பேச்சுவார்த்தைகளின் போது அரசியல் சார்பில்லாத ஒரு சுயாதீனமான முஸ்லிம் பிரதிநிதிகள் குழுவே இடம் பெறவேண்டும் எனவும் கருத்துத் தெரிவித்துள்ளார். அத்துடன், இப் பிரதிநிதிகள் குழுவில் இஸ்லாமிய மார்க்கத் தலைவர்களும் இடம்பெற வேண்டும் எனவும் அவர் விருப்பம் தெரிவித்துள்ளார்.

சமாதானப் பேச்சுவாாத்தைகளில் சிறிலங்கா அரசாங்கமும், தமிழீழ விடுதலைப் புலிகளுமே பிரதான பங்காளிகளாக இருக்க முடியும் என நேற்று முன்தினம் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் அறிக்கை யொன்றினை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ)

# மன்னார் அணிக்கு வெற்றி

## பாடுமீன் அணி படுதோல்வி

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த பளளிமுனை சென்லூசியஸ் கழக கால்பந்தாட்ட அணியினருக்கும் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த குருநகர் பாடுமீன் கழக கால்பந்தாட்ட அணியினருக்குமிடையில் நேற்று முன்தினம் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்ற சினேகபூர்வ கால் பந்தாட்டப் போட்டியில் சென்லூசியஸ் அணியினர் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றியை சுவீகரித்துக்கொண்டனர்.


அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பட்ட இலங்கை கால்பந்தாடடச் சம்மேளனத்தின் பிரதேச கால்பந்தாட்ட அணிகளுக்கிடையிலான டிவிசன்-2கால்பந்தாட்டப் போட்டிகளில் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த பள்ளிமுனை சென்லூசியஸ் அணியினர் சம்பியனாகத் தெரிவாகியிருந்தனர். இவ்வணியியினரைக் கௌரவிக்கும் நிகழ்வொன்றை யாழ்ப்பாணம், வலிகாமம் மற்றும் வடமராட்சி பிரதேச உதைபந்தாட்ட லீக்கினர் மேற்கொண்டிருந்தனர்.

இந்நிகழ்வுகள் நேற்று முன்தினம் சினேகபூர்வ கால்பந்தாட்டப் போட்டிகள் ஆரம்பமாவதற்கு முன்னர் நடைபெற்றன. இந் நிகழ்விற்கு யாழ்.மாவட்ட உதைபந்தாட்ட லீக்கின் அன்ரனிப்பிள்ளை அவர்கள் தலைமைதாங்கி நடாத்தியதுடன், தமிழீழ விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் பாப்பா, யாழ. மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உதைபந்தாட்ட லீக்கின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டிருந்தனர்.


மேலும், இந்நிகழ்வில் யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த விளையாட்டு அதிகாரிகளும், வடக்கு-கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர் கே.டபிள்யூ விமலராஜன் அவர்களும் கலந்துகொணடனீர். முதலில கொடியேற்றல் மற்றும் அக வணக்க நிகழ்வினைத் தொடர்ந்து சென்லூசியஸ் கழக வீரர்கள் கௌரவிக்கப்பட்டதுடன், பரிசுகளும், நினைவுப் பொருட்களும் வழங்கிப் பாராட்டப்பட்டிருந்தனர். இதில் தாம் வெற்றிவாகை சூடியிருந்த அகில இலங்கை ரீதியிலான வெற்றிக் கேடயத்தினை சென்லூசியஸ் கால்பந்தாட்ட அணியின் தலைவர் தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பாவிடம் கையளித்த நிகழ்வும் இடம்பெற்றிருந்தது.

இதனைத் தொடர்ந்து கழக அணிகளுக்கிடையிலான சிநேக பூர்வ கால்பந்தாட்டப் போட்டி நடைபெற்றது. இப் போட்டியில் இடைவேளைகது முன்னதாகவே சென்லூசியஸ் அணியினர் ஒரு கோலைப் போட்டு முன்னணிக்கு வந்திருந்தனர். குறிப்பாக இரண்டு அணிகளுமே பலமாக முயன்றும் போட்டியின் இடைவேளையின் பின்னர் கூட வேறு எந்தக் கோல்களையும் பெறமுடியாது போனதால் சென்லூசியஸ் அணியினர் 1:0என்ற கோல்கணக்கில் பாடுமீன் கழக அணியை வெற்றிகொண்டனர்.

(உ-68)



பிரிஸ்ரல் வைற்சேர்ச் விளையாட்டு கலிரியில் தனக்கெதிராகப் போட்டியிட்ட பொக்ஸிங் வீரர் அயூட்லி ஹர்சனை வீழ்த்திய வெற்றிக்களிப்பில் யூலியஸ் பிரான்ஸிஸ்.




சந்தியாக்கோ பேர்னபேயில் 3:2என்ற வீதத்தில் றியல் மெரிக் கோவிடம் தோல்வி கண்ட டேவிட் பீந்ஹாம் விரக்தியுற்ற நிலையில் காணப்படுகிறார்.

## ஒலிம்பிக் கிராமம் அமைக்கும்

## பணிகள் நிறைவுறும் தறுவாயில்

கிரேக்கத் தலைநகரான எதென்ஸ் நகரில் நிர்மாணிக்கப்பட்டுவரும் ஒலிம்பிக கிராமம் ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்பமாவதற்கு மூன்று வாரங்களின் முன்னதாக நிறைவுபெற்றுவிடுமென ஒலிம்பிக் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

28வது ஒலிம்பிக் போட்டிகள் கிரேக்கத் தலைநகர் எதேன்ஸில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 13ஆம் திகதி முதல் 29ஆம் திகதிவரை நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இதற்கென அமைக்கப்பட்டுவரும் ஒலிம்பிக் கிராமத்தில் 2ஆயிரத்து 292குளிரூட்டப்பட்ட குடியிருப்புக்களும் போட்டி ஆரம்பமாவதற்கு மூன்று வாரங்களிற்கு முன்னதாக தயார்ப்படுத்தப்பட்டுவிடுமென ஒலிம்பிக்போட்டி ஏற்பாட்டாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை, இவ் ஒலிம்பிக் கிராமம் அமைக்கும் பணியில் 10ஆயிரத்திற்கும் அதிகமான ஊழியர்கள் சேவையில் ஈடுபட்டுவருகினறனர். தொடர்ச்சியாக 24மணித்தியாலங்களும் இந்தக் கிராமம் செயற்பட்டு வருவதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

28வது ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்று நிறைவடைந்ததும் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் அங்கவீனர்களுக்கான பரா ஒலிம்பிக் போட்டி நிகழ்வுகளும் இங்கு நடைபெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்திருந்தனர்.(உ-68)

## மகேஷ் பூபதி ஜோடி

## இறுதிச் சுற்றுக்குத் தெரிவு

ரோமில் நடைபெற்றுவரும் ஏடிபிடென்னிஸ் போட்டியில் மகேஷ்-பூபதி மாக்ஸ் மிர்ன்யி ஜோடி இறுதிச் சுற்றுக்கு முன்னேறியது.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற கலப்பு இர்ண்டையருக்கான அரையிறுதி ஆட்டத்தில் பெலாரஸின் மிர்ன்யி உடன் இணைந்து ஆடிய இந்தியாவின் மகேஷ் பூபதி 6-7,6-8,6-2,6-4என்ற செட் கணக்கில் ஜோனஸ் பிஜோர்க்மன் (சுவிட்சர்லாந்து) டாட் உட்பிரிட்ஜ (ஆவுஸ்திரேலியா) இணையைச் சாய்த்தனர்.

பிஜோர்க்மன், உட்பிரிட்ஜ் ஜோடி இப் போட்டியில் இரண்டாம் நிலையைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் விம்பிள்டன் யு.ஸ்.திறந்த போட்டிகளின் நடப்புச் சாம்பியன்களாகவும் உள்ளனர்.

இறுதிச் சுற்றில் ஆவுஸ்திரேவியாவின் பால் ஹான்லி, வேய்ன ஆதர்ஸ் ஜோடியுடன் பூபதி, மிர்ன்யி ஜோடி மோதவுள்ளது.

(உ)

# விளையாட்டுச் செய்திகள்

## ஒலிம்பிக்கில் பங்கேற்கும் வாய்ப்பு

## இந்திய ஹொக்கி அணி வீரர்

## தன்ராஜ் பிள்ளைக்கு இல்லை?

எதென்சில் வரும் ஆகஸ்ட்மாதம நடைபெறவிருக்கும ஒலிம்பிக போட்டியில் இந்திய ஹொக்கி அணியின் நட்சத்திர வீரரான தன்ராஜ் பிள்ளை விளையாடுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இன்று ஜப்பானில் நடைபெறவிருக்கும் 4நாடுகள் பங்கேற்கும் ஹொக்கிப் போட்டிக்கான 18பேர் கொண்ட சோதனை அணியல் தன்ராஜ்பிள்ளை இடம் பெறவில்லை. பரோக்கில் நடைபெறவிருக்கும் உடற்தகுதி சோதனை முகாமிற்கு அழைக்கப்பட்டுள்ள 12பேர் பட்டியலிலும் தன்ராஜ்பிள்ளையின் பெயர் இடம்பெறவில்லை.

30வீரர்கள் கொண்ட இந்தப் பட்டியலில் தன்ராஜ் பிள்ளையின் பெயரை இந்திய ஹொக்கிக் கூட்டமைபபுச் சேர்க்காமையின் மூலம் ஒலிம்பிக் போட்டியில் தன்ராஜ் பிள்ளை விளையாடுவது சந்தேகத்திற்கு இடமாகியுள்ளது.

மேற்படி 30வீரர்களில் இருந்துதான் ஒலிம்பிக் போட்டிக்கான இந்திய அணி வீரர்கள் தெரிவு செய்யப்படுவார்கள் என்று இந்தியக் ஹொக்கி கூட்டமைப்பின் தலைவர் கே.பி.எஸ்.கில் தெரிவித்துள்ளார்.

அதே சமயம் இநத 30வீரர்கள் பட்டியலில் இடம்பெறாத ஓரிரு வீரர்கள் மட்டும் அணித் தெரிவுக்கு பரிசீலனையில் எடுத்துக்கொள்ளப்படுவார்கள் என்றும் கில் தெரிவித்துள்ளார்.


அத்துடன் ஜப்பானில் நடைபெறவிருக்கும் போட்டியில் வீரர்களின் திறமை வெளிப்பாடு கவனிக்கப்படும் அதன பிறகு பயிற்சி முகாமிற்கு யாரைத தெரிவுசெய்வது என்பது பற்றி யோசிக்கப்படும். இப்போது தெரிவு செய்யப்பட்டுள்ள 30வீரர்களில் சில மாறுதல்கள் செய்யப்படும். 30வீரர்கள் பட்டியலில் இடமபெறாதவர்கள் ஓரிவரின் பெயர்கள் மட்டும் பரீசிலனை செய்யப்படும் என்று கில் தெரிவித்துள்ளார்.

ஹொலண்டில் நடைபெறவுள்ள 4 நாடுகள் பங்கேற்கும் போட்டிக்கு பின்னர் ஒலிம்பிக் போட்டிக்கான இந்திய ஹொக்கி அணி விபரம் வரும். ஜூலை மாதத்தில் அறிவிக்கப்படும் என்று கில் தெரிவித்துள்ளார்.

எனினும் தனராஜ்பிள்ளை ஒலிம்பிக் போட்டியில் விளையாடத் தெரிவு செய்யப்படுவார என்பது குறித்து நேரடியாக கில் பதிலளிக்கவில்லை.

ஒலிம்பிக்கில் 16வீரர்கள் மட்டுமே விளையாட முடியும் என்பதால் போட்டி நடக்கக்கூடிய 70 நிமிடங்களும் முழுத்திறமையும் வெளிப்படுத்தி விளையாடக்கூடிய வீரர்கள் மட்டுமே அணிக்குத் தெரிவு செய்யப்படுவர்.

அத்துடன் 30வீரர்கள் கொண்ட பட்டியலில் மூத்த வீரர்களான பல்ஜித் சிங் தில்லான், பல்ஜீத் சிங் சைனி இருவரும் இடம்பெறவில்லை. சமபகாலமாக இந்திய அணியின் விளையாட்டில் ஏற்ற இறக்கம காணப்பட்டுவருகின்றது. எனவே இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டும் சமீபத்தில் எடுக்கப்பட்ட பரிசோதனை முயற்சிகளை கருத்தில கொண்டும் ஒலிம்பிக் போட்டிக்கான அணி தெரிவு செய்யப்படும் என்று கில் மேலும் தெரிவிக்கார். (உ-121)



ஸ்பெயின் தலைநகர் மாட்ரிட்டில் நடைபெற்ற யுரோப்பியன், நீச்சல் சம்பியன் போட்டியில் ரஷ்யா தங்கப்பதக்கத்தையும், ஸ்பெயின் வெள்ளிப்பதக்கத்தையும், பிரான்ஸ் வெண்கலப்பதக்கத்தையும் வென்றன. ஸ்பெயின் வீராங்கனைகள் தங்களது திறமையை வெளிப்படுத்திய காட்சி.

# இன்று ஒரு தகவல்

## மனைவியின் உரிமை

மனிதர்கள் பிறக்கும் போது பல்வேறு உரிமையுடன் பிறக்கின்றார்கள். ஆனால் எங்கு பார்த்தாலும் உரிமைகள் பறிக்கப்பட்ட நிலையிலும், மறுக்கப்பட்ட நிலையிலுமே வாழ்ந்து வருகிறார்கள். ஆணாயினும் சரி, பெண்ணாயினும் சரி அவரவர்க்கென தனித்துவமான, மகத்துவமான உரிமைகள் உண்டு. அவை கணவனுக்கும்,மனைவிக்கும் கூடப் பொருந்தும். அதைவிடத் தாய், தந்தையர், உறவினர், நண்பர்களுக்குக் கூட எம்மீது உரிமையுண்டு.

ஆனால் இவை எல்லாவற்றையும் விட மனைவியின் உரிமை தனியுரிமை என்பது மறுப்பதற்கில்லை. எனவே இவ்வுரிமைகளை மதித்து உரிய மதிப்பளிக்க வேண்டியது கணவனதும் மனைவியினதும் உரிமையும் கடமையுமாகும்.

நாம் இருமினால் வெயிலில் நின்றீர்களா எனக் கரிசனையுடன் கேட்பவள் மனைவி. அத்துடன் உங்கள் அனைதது நலன்களிலும் கரிசனையுடையவள் அவளே. கணவனில் காணப்படும் அறிகுறிகளைக் கொண்டு எமக்கு வரப்போகும் நோய்களையும் துன்ப துயரங்களையும் உணர்ந்து கொள்பவள் மனைவியே. கணவன், பிள்ளைகளின் உணவு உடையைப் பற்றி எப்போதும் சிந்தித்து அதற்காகத் தனது வியர்வையை சிந்துபவளும் அவளே. அத்தோடு உங்கள் வீட்டிலுள்ள பொருடகளுக்கும் பாதுகாவலரும், காவலாளியும் அவளே. எனவே எமது வாழ்வில் கண்ட, காண்கின்ற, காணப் போகின்ற மனிதர்களின் உரிமையை விட அதீத உரி மையுடையவள் மனைவியே. பிறர் உங்களுக்கு வெளியே இருக்கிறார்கள். ஆனால் உங்களுடைய மனைவியோ உஙகளுக்குள்ளேயே எந்நேரமும் குடி கொண்டுள் ளாள். எனவே அவளை நீங்கள் உரிமையுடன் நடத்த வேண்டும். உங்களை நீங்கள்எப்படி நடத்துவீர்களோ அபபடியே அவளையும் நடாத்த வேண்டும். நீங்கள் நல்லது செய்தால் உங்களுக்குள்ளே எப்படி மகிழ்வீர்களோ அது போன்றே உங்களது மனைவியும் நல்லது செய்தால் அதே மகிழ்ச்சியை நீங்கள் அடைதல் வேணடும். நீங்களே உங்களைக கோபித்துக் கொண்டால எவ்வளவு அழகாகவும், அமைதியாகவும் ,புனிதமாகவும் கோபித்துக் கொள்வீர்களோ அது போன்றே உங்கள் மனைவியையும் கோபித்துக் கொள்ளவேண்டும்.

உங்களது மனைவி இப்போது தான் புதிதாகத் திருமணமாகி வந்தவரெனில் மனைவியின் ஆசைகளும், விருப்பங்களும் உடனடியாக வெளிவருவதற்கான வாய்ப்பில்லை. எனவே அவ்விருப்பங்களைத் துருவித்துருவிக் கேட்டு அந்த ஆசைகள், விருப்பங்களை நிறைவேற்ற வேண்டும். மாறாகத் திருமணம் செய்து நீண்ட நாட்கள் ஆகிவிட்டாலோ மனைவி உங்களை நன்றாகப் புரிந்திருப்பாள, தெரிந்திருப்பாள், அறிந்திருப்பாள். எனவே அதற்கொப்ப உங்களிடம் பழகுவதன் மூலம் தனது ஆசைகள், தேவைகள், விருப்பங்களை நிறைவேற்றிக்கொள்ள முயல்வாள். அவ்விடத்தில் துணைபோக வேண்டியதும் மனைவியின் உரிமையை ஈடுசெய்வதும் கணவனின் கடமையும் உரிமையுமாகும்.

இந்த வகையிலே மனைவி தன் உரிமையாளரான கணவனை மதிப்பதும் கணவனின் கடமைகளை நிறைவேற்றுவதும் கூட அவளின் உரிமையே. அப்போதே நிறைவான மகிழ்வான இல் வாழ்க்கையை அனுபவிக்க முடியும். அத்துடன் நல்லதோர் சமுதாயத்தையும் கட்டியெழுப்ப முடியும்.

**மு. விக்னேஸ்வரன்**

## வெளிநாடுகளில் பணிபுரியும் பெண்களுக்கு உரிய பாதுகாப்பு

### வழங்க அரசு நடவடிக்கை

(கொழும்பு)

வெளிநாடுகளில் பணியாற்றும் இலங்கையர்களுக்கென்று பரந்த அடிப்படையிலான சமூக பாதுகாப்புத் திட்டம் ஒன்று அறிமுகம் செய்யப் படவுளளதாக தொழில் அமைச்சர் அதாவுட செனிவிரத்தின் தெரிவித்துளளார்.

இதுபற்றி அவர் ஊடகம் ஒன்றிற்கு கருத்துத் தெரிவிக்கையில்,

இந்தத் திட்டத்தினால் மத்திய கிழக்கு நாடுகளில் பணியாற்றுகின்ற இலங்கைப் பெண்களின் குடும்பங்கள் பெரும் நன்மையடையவுள்ளன.

வறுமை காரணமாக மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலை தேடிச் செல்லும் பெண்கள் அங்கு சென்று பெரும் துன்புறுததலுக்குள்ளாகின்றார்கள்.

சில பெண்கள் உடனேயே நாடு திரும்புகின்றனர் சிலர் வறுமை காரணமாக துன்புறுத்தல்கள் மத்தியிலும் தொழில் பார்த்து வருகின்றனர்.

இத்தகைய பெண் பணியாளர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்க அரசினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அவர்களின் பிள்ளைகளுக்கு (மாணவர்களாக இருப்பின்) புலமைப பரிசில்களும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார்.

(உ-60,10)

## பழைய கசப்பான அனுபவங்களை மறந்து புலிகளுடன் பேசுவதற்கு எப்போதும் தயார்

### ஜனாதிபதி மீண்டும் அறிவிப்பு

(கொழும்பு)

புலிகள் மீதான பழைய கோபதாபங்களை மறந்து அவர்களுடன் சமாதானப் பேச்சைத் தொடர தான் தயாராக இருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.



ஜனாதிபதி மாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற புண்ணியகிரம வைபவத்தில கலந்து கொண்டு உரை யாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் உரை யாற்றிய ஜனா திபதி, தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் எனக்குமிடையே பல்வேறு பிணக்குகள் முன்னர் இருந்து வந்தன.இதனால் ஏற்பட்ட விரோத சிந்தனைகளால் புலிகள் என்னைக் கொலை செய்ய முயற்சித்த சந்தர்ப்பத்தில்தான் நான் எனது ஒரு கண்ணை இழந்தேன்.

அத்துடன், எனக்குச் சார்பாகப் பேசிய அரசியல்வாதிகள்,ஆதரவாளர் பலரும் புலிகளால் தண்டிக்கப்பட்டனர். இவற்றிற்கும் மேலாக எனது கட்டளைப்படி செயற்பட்ட படைவீரர்களும், பொலிஸாரும் புலிகளால் கொல்லப்பட்டனர்.

எனினும், புலிகள் மீது எனக்கிருந்த கோபங்களை மறந்து தற்பொழுது அவர்களுடன் பேசி இனப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண நான் தயாராக உள்ளேன். நாட்டின் நலனைக் கருத்தில் கொண்டே நான் இத்தகைய முடிவை எடுத்துள்ளேன்.

இலங்கை அரசியல் அகராதியிலேயே சமாதானம் என்ற சொல் இல்லாத காலப்பகுதியில் எனது அரசு முதன்முதலாக 1994இல் விடுதலைப்புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களை ஆரம்பித்தது.

இவவாறு எனது அரசால் ஆரம்பிக்கப்பட்ட சமாதான முயற்சிகள் இடையில் கைவிடப்பட்டிருப்பினும் புலிகள் மீதுள்ள பழைய கோபதாபங்களை மறந்து மீண்டும் சமாதானப் பேச்சுக்களை தொடர நான் தயாராகியுள்ளேன் என்று தெரிவித்தார்.

(உ-4,63)

## தேசிய அரசமைக்கும் முயற்சி திரைமறைவில் முழு முனைப்பு

(கொழும்பு)

தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கான திரைமறைவு முயற்சிகள் இடம்பெற்று வருவதாக சில தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதிக்கு நெருக்கமான ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவரின் தலைமையிலேயே இந்நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாகவும் அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் அனுமதியுடனேயே இதுகுறித்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், இந்த யோசனை தொடர்பான உறுதியான நிலைப்பாடுகளை குறுகிய காலத்திற்குள் எட்டுவதற்கான சாத்தியப்பாடுகள் குறைவாகவே இருப்பதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் உயர்பீடத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

தேசிய அரசு ஒன்று நிறுவப்படுமானால் இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் இந்தியா நேரடியாகப் பங்குபற்றுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகக் காணப்படுமென அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். தேசிய அரசு ஒன்றை அமைப்பது தொடர்பாக முன்னரும் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், அவை முறையாகக் கைகூடாமல் பிசுபிசுத்துப் போயிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(உ)

## இராசி பலன்

**11.05.2004**

**(சித்திரை 29, செவ்வாய்க்கிழமை)**
**ஸப்தமி முற்பகல் 10.45 மணிவரை**
**திருவோணம் பிற்பகல் 2.56 மணிவரை**
**இராகுகாலம் 2.54-4.24 மணிவரை**
**சுபநேரம் 10.24-11.54 மணிவரை**
*நடேசரபிஷேகம்*

**மேடம்**
எடுத்தகாரியம் கைகூடும், மேன்மை, தூரதேச் செய்தி, பிறர் உதவி.

**இடபம்**
புதிய திட்டமிடல், முயற்சி தாமதம்,மனச் சஞ்சலம், பிரயாணம்.

**மிதுனம்**
எதிர்பாராத பிரச்சினை,முயற்சி தடங்கல், போசனசுகம்,பணத்தட்டுப்பாடு.

**கடகம்**
குடும்ப நலம்,வாக்கு மேன்மை,பிரயாண நன்மை,கலந்துரையாடல்.

**சிங்கம்**
காரிய நன்மை,நல்லசம்பவம்,தெய்வ சிந்தை, உடல் நலம்.

**கன்னி**
சிறுவியாதி,எடுத்தகாரியம் தாமதமாகும், குடும்பக்கவலை.தொழில் சிந்தை.

**துலாம்**
சத்துருஜெயம், வேலையில்ஆர்வம், ரோக பயம், மாதா சுகம்.

**விருச்சிகம்**
புதிய பொருள் சேர்க்கை,கூட்டு முயற்சி, அந்நியர் சந்திப்பு,காரியசித்தி.

**தனுசு**
கோபப்படுதல், தனவிரயம், முயற்சி தாமதம், திடீர்நன்மை.

**மகரம்**
சொத்துகளால் நன்மை, பெரியோர் சந்திப்பு,தேகநலன், போசன சுகம்.

**கும்பம்**
தேக ஆரோக்கியம், பிரயாண அலைச்சல், சுகசெலவு, உறவினர் மனஸ்தாபம்.

**மீனம்**
எடுத்த கருமங்கள் கைகூடும், நண்பர்கள் சந்திப்பு, தொழில் வருமானம்,போசன சுகம்.

**(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)**

*வளவன்*

## இராணுவத்தினரின் வெசாக் தின விசேட நிகழ்வுகள்

(பலாலி)

யாழ்ப்பாணத்தில் நிலை கொண்டுள்ள இரா்ணுவத்தினர் வெசாக் உற்வசவத்தையொட்டி விசேட சமய நிகழ்ச்சிகளை நடத்தினார்கள்.

யாழ்.பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகத்தினால் ஒழுங்கமைக்கப்பட்ட வெசாக் கூடுகள் பலாலி இராணுவ முகாமில் காட்சிக்கு வைக்கப்பட்டதுடன், பலாலி உயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் நிலை கொண்டுள்ள இராணுவ வீரர்கள் நிர்மாணித்த 24அலங்கார வெசாக் கூடுகள் கண்காட்சிக்கு வைக்கப்பட்டன. உள்நாட்டு வளங்களினால் அமைக்கப்பட்டிருந்த இந்த வெசாக கூடுகளுக்கிடையே தெரிவுப் போட்டிகளும் நடத்தப்பட்டன.

இந்தத் தெரிவுப் போட்டிகள் யாழ்.மாவட்ட பிரதி இராணுவத் தளபதியின் தலைமையில் இடம் பெற்றது.இவ்வாறு அமைக்கப்பட்டிருந்த கூடுகளில் சிறப்பான முதல் ஏழு இடங்கள் தெரிவு செய்யப்பட்டு அவற்றை நிர்மாணித்தவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.

அத்துடன், தென்மராட்சிப் பிரதேசத்தில் நிலை கொண்டுள்ள 55ஆவது சேனையக இராணுவத்தினரும் வெசாக் பண்டிகையை மிக விமரிசையாகக் கொண்டாடினார்கள்.

இதன் ஒரு அங்கமாக 55வது சேனையகத்தினால மிருசுவில் சந்தியில் 5ஆம் திகதி அன்னதானம் வழங்கப்பட்டதுடன், வெசாக தினத்தன்று முதலாவது சிங்க ரெஜிமென்ட் பிரிவினர் முகமாலை சோதனை நிலையத்தில் வைத்து குளிர்பானம் வழங்கினர்.

மேலும் 4வது கஜபாகு படைப் பிரிவினர் அன்றைய தினம் எழுதுமட்டுவாள் பகுதியில் அன்னதானம் வழங்கினர். 14வது கெமுனு படைப்பிரிவினர் எழுதுமட்டுவாள் பகுதியில் பலகாரம் மற்றும் பாற்சோறு வழங்கினார்கள். அத்தோடு 14வது கெமுனு படைப்பிரிவு மற்றும் 14வது காலாட்படை பிரிவு ஆகியன இணைந்து கிளாலி,கச்சாய் பகுதியில் வசிக்கும் மக்களுக்கு உணவுப் பொதிகளை வழகினர்.

## படையினரிடம் சரண்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் பெண் உறுப்பினர் ஒருவர் ஓமந்தை இராணுவச் சோதனைச் சாவடியில் சரணடைந்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இவரை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் ஒப்படைக்கவுள்ளதாக இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

(ச)

# உறவு மேம்பாட்டு நடவடிக்கையை அணு ஆயுதத்துடன் தொடர்புபடுத்தலாகாது

## அமெரிக்க உதவி அமைச்சர்

இந்தியா மற்றும் பாகிஸ்தானுடனான உறவை மேம்படுத்த எடுக்கப்படும் நடவடிக்கைகளை இவ்விரு நாடுகளையும் அணுஆயுத நாடுகளாக ஏற்றுக் கொண்டதாக எடுத்துக் கொள்ளக்கூடாது என்று அமெரிக்கா கூறியுள்ளது.

சமீபத்தில் இவ்விரு நாடுகளுடனான உறவை மேம்படுத்த பல்வேறு நடவடிக்கைகள்ள எடுத்து வருகிறோம். அவை தீவரவாதத்திற்கு எதிரான நடவடிக்கையை தீவிரப்படுத்துதல், ஏற்றுமதிக் கட்டுப்பாடுகளில் கூட்டுறவு உள்ளிட்ட வற்றுக்காகத்தான் என்று அமெரிக்காவின் அணு ஆயுதப் பரவல் தடை உதவி அமைச்சர் ஜான்.எஸ். உல்.'.ப் தெரிவித்தார்.

2005இல் அணுஆயுதத் தடை பரவல் ஒப்பந்தம் புதுப்பிக்கப்படுகிறது. அதற்காக நியூயோர்க்கில் வரும் செவ்வாய்கிழமை நடைபெறும் ஆயத்தக் கூட்டத்திற்கு முந்திய கூட்டத்தில் பேசுகையில் அவர் தெரிவித்தார்.

மேலும் கூறுகையில், இதே போன்ற உறவை மேம்படுத்தும் நடவடிக்கைகளை அணு ஆயுதப் பரவல் தடுப்பு ஒப்பந்தத்தின் கீழ் இந்நாடுகளை அணு ஆயுத நாடுகள் என்ற அந்தஸ்தை அளித்ததாகக் கருதக் கூடாது. அவ்வாறு அளிக்கவும் இல்லை.

அணுகுண்டுச் சோதனை அவற்றின் பயன்பாடு மற்றும் பரவல் மூலம் தெற்காசியாவின் ஸ்திரத்தன்மைக்குப் பாதிப்பு ஏற்படக்கூடாது என்பதுதான் எங்களுடைய நோக்கமாகும். இந்தியா, இஸ்ரேல், பாகிஸ்தான் ஆகியவை ஒப்பந்தத்தில் அணுஆயுதப் பரவல் எதிர்ப்பு நாடுகளாக சேரும் என்று நம்புகிறோம். அமெரிக்காவின் சட்டம் மற்றும் கொள்கைகளின் படி அணுத் திட்டங்களுக்கான நிதியைப் பெற இந்தியாவும் பாகிஸ்தானும் தகுதி பெறவில்லை.

அணுகுண்டு நிபுணர் ஏ.ஜி. கான் மூலம் அணுஆயுத இரகசியங்கள் கசிந்தது போன்றவற்றுக்கெதிராக பாகிஸ்தான் தொடர்ந்தும் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

இதுபோன்ற கும்பல்கள் எங்கெங்கு உள்ளனவோ அவற்றின் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த அந்தந்த நாடுகள் தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். மீண்டும் இது போன்ற சம்பவங்கள் நடைபெறாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றார். (உ)



ரஷ்யாவின் சுதந்திர தினம் ரஷ்ய இராணுவ தினமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. நேற்று தலைநகர் மாஸ்கோவில் நடைபெற்ற இராணுவ தின அணிவகுப்பு நிகழ்ச்சியை வேடிக்கை பார்க்கும் சிறுவன்.

# அயல் நாட்டுப் படைகள் மீதான தாக்குதல் ஈராக்கில் அதிகரிப்பு

(பக்தாத்)

ஈராக்கின் பகுபா நகரிலிருந்து 20 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள ஹபாப் நகரில் பொலிஸ் அதிகாரி ஒருவரின் வீட்டின் அருகே நடத்தப்பட்ட தாக்குதலில் அவரது குடும்ப உறுப்பினர் மூவர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் மூவர் காயமடைந்துள்ளனர்.

பொலிஸ் அதிகாரியான மியூயத் அயாத்தின் இல்லத்துக்கு வெளியே வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததில் இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது. இறந்தவர்களில் இருவர் பெண்கள். அமெரிக்கப் படைகளின் மீது தாக்குதல் நடத்துபவர்களின் முக்கிய மையமாக பகுபா பகுதி விளங்கி வருகிறது.

ஈராக்கில் மற்றொரு நகரான முக்தாதியாவில் நகர மேயர் இல்லத்தின் மீது துப்பாக்கி ஏந்திய மூவர் தாக்குதல் நடத்தினர். இதையடுத்து. மேயரின் பாதுகாவலர்களுக்கும் அவர்களுக்கும் கடும் சண்டை மூண்டது. இதில் பாதுகாவலர் ஒருவர் காயமடைந்தார்.

இதேவேளை, பாஸ்ராவில் பிரிட்டிஷ் படைகள் மீது ஏராளமான அல் சதார் அமைப்பினர் தாக்குதல் நடத்தி ஆளுநர் மாளிகைக்குள் செல்ல முற்பட்டனர். எனினும் மாளிகையை பிரிட்டிஷ் படைகள் தக்க வைத்துக் கொண்டன.

இத் தாக்குதலில் காயடைந்தோர் மற்றும் இறந்தோர் குறித்த விவரங்கள் கிடைக்கவில்லை அதைத் தொடர்ந்து அல் சதார் அமைப்பின் தலைமையகத்தை 50 வாகனங்களில் சென்ற பிரிட்டிஷ் படைகள் சுற்றிவளைத்தன. எனினும் உடனடியாகப் பொதாக சண்டை ஏதும் வெடிக்கவில்லை.

அமெரிக்கக் கூட்டணிப் படைகளின் தலைமையகம் மீது ராக்கெட் மூலம் எறி குண்டுகளை வீசி தாக்குதல நடததப்படடதும் குறிப்பிடத்தக்கது. (உ)

WORLD NEWS
உலக தரிசனம்

# பின்லேடன் மிரட்டலை அடுத்து அனான் முன்னெச்சரிக்கை நடவடிக்கை

(லண்டண்)

அல்கெய்டா அமைப்பின் தலைவர் ஒசாமா பின்லேடன் விடுத்துள்ள கொலை மிரட்டலால் தனது பணிகள் பாதிக்கப்படாது என ஐ.நா. பொதுச் செயலாளர் கோபி அனான் தெரிவித்துள்ளார்.

இம்மிரட்டல் அனானுடைய பணிகளையும் ஈராக்கிலுள்ள ஐ.நா. பிரதிநிதி லக்தரின் பணிகளையும் பாதித்துள்ளதாக வெளியான செய்தி குறித்து அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

நாங்கள் முன்னெச்சரிக்கையாக மேற்கொண்டு விட்டு, தொடர்ந்தும் பணிகளைச் செய்து கொண்டிருக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இக்கொலை மிரட்டலை தாம் தீவிரமாகக் கருத்தில் கொண்டுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (உ)

## கண்ணிவெடியில் சிக்கி செச்னிய அதிபர் பலி

# தாக்குதல் நடத்தியயோர்க்கு தகுந்த பதிலடி ரஷ்ய அதிபர் புடின் அதிரடி அறிவிப்பு

(மொஸ்கோ)

செச்னிய தீவிரவாதிகளின் கண்ணி வெடித்தாக்குதலுக்கு அந்நாட்டு அதிபர் அகமத் கதிரோவ் உட்பட 14 பேர் பலியாகினர். 38 பேர் காயமடைந்தனர். தலை நகர் குரோன்சியில் உள்ள விளையாட்டு மைதானத்தில் சனிக்கிழமை நடந்த வெற்றித் திருவிழாவின் போது இச்சம்பவம் நடந்தது

இராணுவத்தின் மூத்த மண்டல கமாண்டர் வலேரிபாரனோவ் இச் சம்பவத்தில் பலத்த காயங்களுடன் சிகிச்சை பெற்று வருகிறார்.

ஹிட்லரின் நாசிப்படைகளின் தோல்வியைக் குறிக்கும் வகையில் நடை பெற்ற வெற்றித் திருவிழாவை கதிரோவ் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் பார்வையிட்டன. அப்போது மிகமுக்கிய பிரமுகர்கள் அமர்ந்திருந்த இடத்தில் வைக்கப் பட்டிருந்த கண்ணிவெடி வெடித்தது.

இதில் பலத்த காயமடைந்த அந்நாட்டு அதிபர் கதிரோவ் 30 நிமிடங்களுக்குப் பின் உயிரிழந்ததாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

ராய்டர் செய்தி நிறுவனத்தின் புகைப்படக் கலைஞரும் இக் குண்டு வெடிப்பில் உயிரிழந்துள்ளார்.

இக்காக்குகலுக்குக் கடும் கண்டனம் தெரிவித்துள்ள ரஷ்ய அதிபர் விளாடிமீர் புடின் தாக்குதல் நடத்தியவர்களுக்கு தகுந்த பதிலடி கொடுக்கப்படும் என்று கூறியுள்ளார்.

மொஸ்கோவில் நடைபெற்ற வெற்றித் திருவிழாவில் இராணுவ அணிவகுப்பு மரியாதையை ஏற்றுப் பேசிய வேளையிலேயே புடின் இவ்வாறு கூறியுள்ளார்.

செச்னிய பிரிவினைவாதிகள் இத்தாக்குதலை நடத்தியிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுவதுடன் ரஷ்ய ஆட்சிக்கு எதிராக செச்னிய பிரிவினை வாதிகளின் நடவடிக்கை தொடர்வதை இச் சம்பவம் உணர்த்துகிறது.

இதேவேளை கதிரோவ் உயிரிழந்ததை உறுதிசெய்த புடின் செச்னியாவின் பிரதமர் செர்ஜி அப்ரமோவை தற்காலிக அதிபராக நியமித்துள்ளார்.

1994-1996 செசன்ய போரின் போது கலகக்காரராக இருந்த கதிரோவ் 1999இல் நடந்த இரண்டாவது செசன்ய பேரின போது அணி மாறினார். அதையடுத்து அவரை செசன்ய அதிபராக புடின் நியமித்தமை குறிப்பிடத்தக்கது. (உ)



அமெரிக்காவில் உள்ள நியூஆர்லியான் நகரில் ஆராய்ச்சி மையத்தில் உருவாக்கப்பட்ட குளோனிங் ஆப்ரிக்க காட்டுப் பூனைகள் ஒன்றோடு ஒன்று கொஞ்சி மகிழும் காட்சி.

## கடத்தல் காரர் கைது

(லொஸ் ஏஞ்சல்ஸ்)

அமெரிக்காவிலிருந்து சீனாவுக்குத் தடைசெய்யப்பட்ட ஆயுதங்களைக் கடத்திய இருவர் கைது செய்யப்பட்டனர்.

பாஸ்டனில் கடந்த ஓராண்டாக இவர்கள் மீதான வழக்கு நடைபெற்றுவரும் நிலையில் லொஸ் ஏஞ்சல் விமான நிலையத்தில் பாஸ்டனில் இருந்து வந்த விமானத்திலிருந்து அவர்கள் இறங்கியதும் கைது செய்யப்பட்டனர்.

ஆயுத ஏற்றுமதித் தடைச் சட்டத்தை மீறியதாக இருவர் மீதும் குற்றம் சாட்டப்படடிருந்தது. குற்றம் நிருபிக் கப்பட்டால் இருவருக்கும் ஐந்து ஆண்டு சிறைத் தண்டனையும் 1.12கோடி ரூபாய் அபராதமும் விதிக்கப்படும். (உ)

# உடற்சுத்திக்கும் ஆரோக்கியத்திற்கும் ஏற்ற மூலிகை புளிச்சக் கீரை

## மருத்துவ விளக்கம்

டாக்டர் ஆர்.என். துரைராஜ்

நம் நாட்டில் கிடைக்கும் கீரை வகைகளில் புளிச்சக் கிரையும் ஒன்று. இக்கீரை உணவுக்கு மட்டுமின்றி, அதன் நாருக்காகவும் பயிர் செய்யப்படுகிறது.

புளிச்சல் கீரைக்கு காய்ச்சினிக் கீரை, புளிச்சிறுகீரை, காய்ச்செரி, காய்ச்சுக்ரை மற்றும் கோங்கு, சீமைக்காசினி எனப்பல் வேறு பெயர்களும் உண்டு. இக்கீரை புளிததன்மையுடையதாகையால் இதற்குப் புளிச்சல் கீரை என்று பெயர் வழங்கப்படுகிறது.

இதனுடைய, இலை,தண்டு, விதை ,பூ அனைத்துமே மருத்துவத்திற்கு ஏற்றது. இதன் நார் சணலை விட வலிமை பெற்றதாக இருப்பதுடன், மருந்தாகவும் திகழ்கிறது.

### தீரும் நோய்கள்

இதயநோய், சிறுநீரகக் கோளாறு, குடற்புண், பித்தம், செரிமானக்கோளாறு, நரம்பு சம்பந்தமான கோளாறுகள் , இரத்த அழுத்தம், மலச்சிக்கல், வாத நோய், ருசியின்மை,சீதளம், இரத்தப்பித்த ரோகம், கரப்பான், வீக்கம்,வயிற்று வலி, அரோசகம், பித்தவாந்தி, உடல் சூடு சம்பந்தப்பட்ட பல நோய்கள் இக்கீரையால் தீரும். உடல் வலிமைக்கும், தாது விருத்திக்கும் ,உடல் பளபளப்பாக அழகுடன் மிளிர்வதற்கும் இக் கீரை மிகவும் பயனுள்ளது.

இக்கீரையில் உள்ள புளித்தன்மை இருமலையும் மாந்தத்தையும் போக்குகிறது. காய சித்தியும் புணர்ச்சியில் ஆவலையும், வீரிய விருத்தியையும் உண்டாக்கிறது. இக்கீரையை எண்ணெய்யில் வதக்கிப் பொரியலாகச் சாப்பிடலாம். இதைக்கடைந்து உண்டாலும் சுவையாக இருக்கும் .இக்கீரையைச் சுத்தம் பார்த்து அம்மியிலிட்டு அரைத்துத் துவையலாக உண்டாலும் மிகச் சுவையாக இருக்கும். இக்கீரையுடன் மிளகாய் வற்றல், உப்பு , கடுகு, வெந்தயம், மஞ்சள் பொடி ஆகியவற்றைச் சேர்த்து எண்ணெய்யில் வதக்கி அரைத்துத் துவையல் செய்து சாப்பிடுவது சுவையாக இருக்கும்.

### வயிற்று வலி

புளிச்சல் கீரையை இடித்து, உடலில் காணும் கட்டிகளுக்கு வைத்துக் கட்டினால் நலமடையும். இக் கீரை வயிற்று வலியைப் போக்கும் சக்தியுடையது. இது வாத சம்பந்தமான பிணிகளைப் போக்கிப் பித்தத்தை அகற்றும், சிரங்கைப் போக்கும் , உஷ்ணத்தைச் சமன்படுத்தும், வயிறு சம்பந்தமான அனைத்துப் பிணிகளையும் கட்டுப்படுத்தி வாய்வினால் ஏற்படும் சிரமத்தையும் போக்கும்.

இக்கீரை உடலுக்கு குளிர்ச்சியை உண்டாக்குகிறது. செரிமான சக்தியை ஊக்குவித்துப் பித்தத்தை தணிக்கிறது. குடல் ரணத்தை (குடற்புண்) சுகப்படுகிறது. சிறுநீரைப் பெருக்குகிறது. இதய நோய்களுக்கும் நரம்பு சம்பந்தமான பிணிகளுக்கும் மருந்தாகப் பயன்படுகிறது. இரத்த அழுத்தத்தைக் குறைக்கிறது.

மலத்தை இளக்கி மூல உபத திரவத்தை தணிக்கிறது.

### தண்டு

இக்கீரையின் கொழுந்து, தண்டு முதலானவை கால்நடைகளுக்கு உணவாகப் பயன்படுகின்றன. எருமை, பசு முதலிய கால்நடைகள் கூட இந்த இலை தழை தண்டுப் பகுதிகளை உண்டால் அதிகமாகப் பால் கொடுக்கும்.

இதன் பூக்களையும் சமைத்து உண்ணலாம். இப்பூக்களைச் சாறு எடுத்து அத்துடன் சிறிய மிளகும் சர்க்கரையும் சேர்த்து அருந்தினால் ஆரோசகம், பித்தவாந்தி ஆகியவை நீங்கி நலன்பெறலாம்.

### விதை

புளிச்சக்கீரை விதைகளை வறுத்து, கடலை போல் சாப்பிடலாம். விதையிலிருந்து எடுக்கப் படும் எண்ணெய்யை வீக்கங்களுக்கும் , காயங்களின் மேலும் தடவி வந்தால் வலி அகலும். இதர மருந்துகளுடன் சேர்ந்து இவ் விதைகளை உண்டு வந்தால் உடல் வலிமை உண்டாகும். இத்தோடு கேக்குகள் முதலிய உணவுப்பண்டங்களுக்கு நிறமும் சுவையும் ஊட்டுவதற்கும் இக்கீரை பல விதங்களில் பயன்படுகிறது.

சோப்புகளுக்குப் பல வித நிறங்களைத் தருவதற்கும் இக் கீரை உபயோகிக்கப்படுகிறது. இவ்விதையிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய்யை, விளக்கு எரிப்பதற்கும், பெயிண்ட், வார்னிஷ் மெழுகுத் துணி முதலியவைகளைத தயாரிப்பதற்கும் பல விதத்தில் உபயோகிக்கப்படுகிறது. சுத்திகரிக்கப்பட்ட எண்



ணெய்யை சமையலுக்கும் உபயோகப்படுத்தலாம்.

கிராமங்களில் புளிச்சல்கீரை விதைகளை ஊறவைத்துப் பால் தரும் கால்நடைகளுக்கு தீவனமாகக்கொடுப்பதுண்டு. இவ் விதைகள் கோழித்தீவனமாகவும் உபயோகிக்கப்படுகிறது.

### நார

புளிச்சல் கீரைத் தண்டின் மீதுள்ள நார் மிகவும் பயனுள்ளது. சணலுக்குப்பதிலாக இந்நாரைப் பெற புளிச்சல்கீரைச் சொடிகளை நாருக்காகவே வளர்க்கின்றார்கள். இந்த நார் பட்டுப் போல மெண்மையாகவும், வெண்மை நிறத்துடனும் இருந்த போதிலும், இது சணலை விட வலிமையானது. சணலைப் போல் ஆறு மடங்கு அதிக காலம் உழைக்கக் கூடியது. இந்த நாரினால் தரை விரிப்புக்கள் ,கட்டில் கச்சை நாடா,மீன் வலைகள், கயிறு, வடம் கோணிப்பை முதலிய பொருட்களைத் தயாரிக்கலாம். உயர் வகைக் காகிதங்களைத் தயாரிப்பதற்கு இதர மூலப் பொருட்களுடன் புளிச்சல்க் கீரை நாரும்சேர்க்கப்படுகிறது. நார் நீக்கிய மீதிப் பகுதிகள் எரி பொருள்களாகவும் பயன்படுகின்றன. புளிச்சல் கீரையின் உலர்த்தப்பட்ட தண்டுகள் தீக்குச்சிகள் செய்வதற்கும் பயன்படுகிறது.

புளிச்சல்கீரையின் 76 விழுக்காடு உண்ணும் தகுதிபெற்றவை. இக்கீரையில் 86.4 விழுக்காடு நீரும் 1.7 விழுக்காடு புரதச்சத்தும் 1.1 விழுக்காடு கொழுப்புச் சத்தும், 0.9 விழுக்காடு தாது உப்புக்களும் , 9.9 விழுக்காடு மாவுச் சத்துக்களும் இருக்கின்றன.

100கிராம் புளிச்சல் கீரையில் 172 மில்லிக் கிராம் சுண்ணாம்புச் சத்தும், 35 மில்லிக்கிராம் மக்னீசியமும் ,14 மில்லிக்கிராம் ஆக்ஸாலிக் அமிலமும், 40 மில்லிக் கிராம் மணிச்சத்தும்,5 மில்லிக் கிராம் இரும்புச்சத்தும், 60 மில்லிக் கிராம் கந்தகச் சத்தும்,19 மில்லிக் கிராம் குளோரின் சத்தும் இருக்கின்றன. மேலும், இது 56 கலோரி சக்திகளை அளிக் கக் கூடியவை. உயிர்ச்சத்துக்களில் விற்றமின் -ஏ 4,830/ (அகில உலக அலகு) இருக்கிறது. தயமின் 0.07 மில்லிக்கிராமும் ரைப்போ /பிளேவின் 0.21 மில்லிக்கிராமும் நகோடினிக் அமிலம் 1.5 மில் லிக்கிராமும் விற்றமின் -சி மில்லிக்கிராமும் உள்ளன.

### பொதுப்பண்பு

புளிச்சல்கீரைக்கு தாயகம் ஆப்பிரிக்கா, சோவியத் ரஷ்யாவிலும் தென்ஆபிரிக்காவிலும் மத்திய மற்றும் வட அமெரிக்காவிலும் இது மிகவும் சிறப்பாக பயிரிடப்படுகிறது.

மேலும், ஜாவா, சீனா, பார்மோசா முதலிய கிழக்காசிய நாடுகளிலும் இது பயிராகிறது. சோவியத் ரஷ்யாவில் இப் பய... ளை பற்றி ஆராய்ந்தபொழுது .இது நண்ட பகல் பொழுது உள்ள நாட்களில் நன்றாக வளர்ந்து குறைந்த பகல்பொழுது உள்ள நாட்களில் பூப்பது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

இக்கீரை எல்லா வகையான மண்ணிலும் வளரும். சத்துள்ள நிலங்களில் சொழித்து வளர்ந்து அதிகக்கீரையை கொடுக்கும் . இப் பயிர் தமிழ் நாட்டில் மானாவரி யாக ஜுலை- ஆகஸ்ட்டில் விதைக்கப்பட்டு, டிசம்பரில் அறுவடை செய்யப்படுகிறது.

நாருக்காக அறுவடை செய்ய வேண்டுமானால் அறுப்புத்தருவாயில் அறுவடை செய்ய வேண்டும். அதற்குப்பின் அறுவடை செய்தால் நார் முற்றி மிகக் கடினமாகிவிடும். நாரின் பளபளப்பு தன்மையும் போய்விடும்.

### முடிவுரை

புளிச்சல் கீரை நல்ல உணவாகவும் சிறந்த மருந்தாகவும் திகழ்கிறது. இதில் நிறைய இரும்புச் சத்தும் கல்சியமும் இருக்கிறது. இதைத் தொடர்ந்து சாப்பிட்டுவந்தால் நல்ல உடல் வலிமையும் உடல் வனப்பும் ஏற்படும். உடல், உஷ்ணத்தைச் சமப்படுத்தும் உடற் சுத்திக்கும் ஆரோக்கியத்திற்கும் ஏற்ற கீரை இது. இதைக் காசநோய் உள்ளவர்கள் தினமும் சாப்பிடலாம். *

---

#### பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ்

# தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளுக்கு எதிரான வழக்கு விசரணைகள் பூர்த்தி

(கொழும்பு)

பயங்கரவாத த்டைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட வழக்குகளின் விசாரணைகள் அனைத்தும் பூர்த்தியடைந்துள்ளதாகப் பிரதம நீதியரசர் சரத்என்சில்வா தெரிவித்துள்ளார்.

இது பற்றி அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், வெலிக்கடையில் இதற்கென அமைக்கப்பட்ட விசேட நீதிமன்றில் 150க்கும் அதிகமான வழக்குகள் அண்மையில் விசாரணைக் கென எடுத்துக்கொள்ளப்பட்டன.

இவற்றில் 125 வழக்குகளின் விசாரணைகள் பூர்த்தியடைந்துள்ளன.இன்னும் 25 வழக்குகளின் விசாரணைகளே பூர்த்தியடையாதிருக்கின்றது.விரைவில் இவை பூர்த்தியடைந்துவிடும் என்றார்.

(தி-60,10)

# தூதரகப் பணியாளர்களை விசாரிக்க நடவடிக்கை

(கொழும்பு)

வெளிநாடுகளில் இயங்கும் இலங்கைத் தூதரகத்தில் பணியாற்றும் அதிகாரிகள் மீது சுமத்தப்பட்டிருக்கும் ஊழல் குற்றச்சாட்டுக்கள் குறித்த விசாரணைகள் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வெளி நாட்டு வேலை வாய்ப்பு பணியகத் தலைவர் கருணாசேன கெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

அத்துடன் வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களில் மேலதிகமாகப் பணியாற்றும் அதிகாரிகள் போதிய தகைமைகளை கொண்டிராத அதிகாரிகள் ஆகியோரையும் இலங்கைக்கு உடனடியாகத் திருப்பி அழைக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாகவும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தலைவர் கருணசேன கெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

(உ-60.10)

# கிளி.மாவட்டப் பாடசாலைகளுக்கு நிக்கொட் நிறுவனம் நிதியுதவி

(திருநெல்வேலி)

நிக்கொட் நிறுவனம் கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளின புனரமைப்பிற்கென இவ்வாண்டு 95 மில்லியன் ரூபா நிதியினை ஒதுக்கீடு செய்துளளதாக கிளிநொச்சி மாவட்ட வலயக் கல்வி பணிப்பாளர் ப.அரியரத்தினம் தெரிவித்தார்.

இதன்படி சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயம், ஐயானந்தபுரம் அ.த.க.வித்தியாலயம், இரணைமாதநகர் அ.த.க. வித்தியாலயம்,கனகபுரம் மகாவித்தியாலயம்,சிறிவிக்கேனஸ்வரா கல்லூரி,பாரதிபுரம் மகாவித்தியாலயம், சிவபாத கலையகம் அ.த.க. வித்தியாலயம் என்பவற்றைப் புனரமைக்க 35 மில்லியன் ரூபாவும் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பளை மத்திய கல்லூரி,பூநகரி மகா வித்தியாலயம், தர்மபுரம் மகாவித்தியாலயம் ,கிளிநொச்சி மத்திய கல்லூரி, கனகபுரம் மகாவித்தியாலயம் என்பவற்றில் ஆசிரியர் விடுதிகளை அமைக்க 50 மில்லியன் ரூபாவும்,

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளின் தளபாடத் தேவைக்கென 10மில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த கால யுத்தத்தால் மிகவும் உருக்குலைந்துபோன கிளிநொச்சி மாவட்ட மாணவரின் கல்வித் தரத்தை உயர்த்துவதை நோக்காகக் கொண்டே இந்நிதி உதவி வழங்கப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

(43)

# எது உங்கள் அரசியல்? தெரியுமா? வாக்களிப்பது பற்றிய கண்ணோட்டம்

பதினான்காவது மக்களவைக்காக தமிழகத்திலும் நாட்டின் இதரப் பகுதிகளிலும் நடைபெற்ற பொதுத் தேர்தலில் எத்தனை பேர் வாக்களித்துள்ளார்கள் எனத் தெரியவில்லை.

1952 இல் நடந்த முதல் தேர்தலிலிருந்து கடந்த தேர்தல் வரையிலான கணக்கைப் பார்த்தால் வாக்களித்தவர்களின் எண்ணிக்கை குறைந்தபட்சம் 55சத விகிதத்திலிருந்து அதிகபட்சம் 63 சத விகிதத்தைத் தாண்டவில்லை.

கடந்த தேர்தலில் மொத்தமுள்ள 62 கோடி வாக்காளர்களில் 37 கோடி பேரே வாக்களித்திருக்கிறார்கள். மீதமுள்ள 25 கோடி பேருக்கு என்ன நடந்தது?

ஓர் இந்தியக் குடிமகனாக சகல உரிமைகளையும் கோருபவர்கள். அதே குடிமகனுக்குரிய ஜனநாயகக் கடமையை அதுவும் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை நிவேற்றுவதற்குக் கூட ஏன் தயக்கம் காட்டுகிறார்கள்?

அரசியல் என்றாலே சாக்கடை, மோசம் என்பது போன்ற கருத்துக்கள் வாக்காளர்களிடையே, குறிப்பாகப் படித்த வாக்காளர்களிடையே சமீப காலங்களில் பெருகி, பரவி வருவதுதான் இதற்கு முக்கிய காரணம்.

அரசல் தனியார் அலுவலகங்களில்,குடும்பங்களில்,உறவினர் வட்டங்களில்,கல்வி நிலையங்களில்,இலக்கியத்தில்... எங்கும் அரசியல் இருக்கதான் செய்கிறது.

ஊழல் மலிந்து விட்டது. வறுமையும் வேலையில்லாத் திண்டாட்டமும் ஒழியவில்லை. தண்ணீர் பிரச்சினை தலைவிரித்தாடுகிறது.வன்முறைகள் பெருகி விட்டன.கிரிமினல்கள் அரசியலில் போட்டியிடுகிறார்கள்.. இதற்கெல்லாம் அரசியல்வாதிகள்தான் காரணம் என்று ஒட்மொத்தமாகக் குற்றம்சாட்டி வரும் தலைமுறையின் மனத்தில் அரசியல் பற்றிய ஒரு கேவலமான சித்திரத்தை நிறுவமுற்படுவது முற்றில் நியாயமா?

தேர்தலில் போட்டியிட்டு யெஜயித்து மந்திரியாகி நம்மிடையே நடமாடும் அரசியல்வாதிகள் எங்கிருந்து வந்தார்கள்...? தேர்தலில் சமயத்தில் மட்டும் வேறு கிரகத்திலிருந்து குதிக்கிறார்களா, என்ன? நம்மிலிருந்துதானே வருகிறார்கள்.

அரசியலை அருவருப்பாகக் கருதுகிறவர்கள் அதனால், வாக்களிக்க விரும்பாதவர்கள் இதே அரசியல் மூலமும் அரசியல் வாதிகள் மூலமும் கிடைக்கும் அனுகூலங்களை நிராகரிக்கத் தயாரா?

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு காலனியாதிக்கத்திலிருந்து விடுதலை பெற்று ஜனநாயக நாடாக மலர்ந்த பல நாடுகள் தொடர்ந்து ஜனாநாயகத்தைக் காப்பாற்ற முடியாமல் இராணுவ ஆட்சி,ஒரே கட்சி ஆட்சி,ஒருநபர் எதேச்சாதிகாரம் எனத் தத்தளித்துக் கொண்டிருக்கிறன.

இந்தப் பின்னணியில் சுதந்திரமடைந்து 57ஆண்டுகளில் நாள் தோறும் பெருகிவரும் எண்ணற்ற கட்சிகளுக்கும் இடமளித்து ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை தேர்தல் நடத்த கூடியவரை நிலையான ஆட்சியைத் தந்து ஜனாநாயகத்தைப் பெரிய சேதமின்றி காப்பாற்றிக் கொண்டு வருகிறது இந்தியா.இதற்கு இந்திய அரசியலும் கட்சிகளும் முக்கியக் காரணம் என்பதை மறுத்துவிட முடியாது.

கட்சித் தாவல் தடைச்சட்டம் முதல கத்துவட்டித் தடைச்சட்டம் வரை நமது சமூக ஆரோக்கியததை மேம்படுத்தும் பல நடவடிக்கைகளும் இதே அரசியல் வழியாகத்தான் சாத்தியமாயிருக்கிறது.நில உச்ச வரம்புச் சட்டம். விவசாயகளுக்கு இலவச மின்சாரம்,கல்வி, வேலை வாய்ப்புகளில் இட ஒதுக்கீடு,வரதட்சணை ஒழிப்புச் சட்டம்,உள்ளாட்சிகளில் மகளிருக்கு33 சத விகித இட ஒதுக் கீடு, தகவல் அறியும் உரிமைச் சட்டம், தேர்தலில் போட்டியிடு பவர்கள் சொத்துக்கணக்கைத் தாக்கல் செய்வது கட்டாயமாக்கப்பட்டது.

புதிய வேலை வாய்புகளை அளிக்கும் பி.பி.ஓ..., கோக், பிட்ஸா, செல்.்.போன் வரை எண்ணற்ற உரிமைகளையும் புதிய வாய்ப்புகளையும் இதே அரசியல் வழியாகத்தான் இந்திய ஜனநாயகம் தந்து கொண்டிருக்கிறது.

இதையெல்லாம் அனுபவித்துக்கொண்டு வாக்களிக்காமலிருப்பது எங்ஙனம் நியாயம்? வாக்களிக்கும் உரிமை போல வாக்களிக்காமலிருப்பதற்கும் அதாவது எந்த வேட்பாளருக்கும் வாக்களிக்க விருப்பமில்லை என்றொரு வாய்ப்பையும் தரவேண்டும் என்று தன்னார்வ அமைப்புகளும் சமூக ஆர்வலர்களும் கோரிவருகிறார்கள்.இதற்கான அதரவு வலுப்படும் பட்சத்தில் அதையும் கூட இதே அரசியல் வழியாகத்தான் சாதிக்க முடியும். (து)

## களம் கண்டமக்களவை உறுப்பினர்கள்

பாரதிய ஜனதாக் கட்சியைப் பொறுத்தவரை கலைக்கப்பட்ட 4 மக்களவை உறுப்பினர்கள் மீண்டும் களம் காணுகிறார்கள்.

கலைக்கப்பட்ட மக்களவையில் அங்கம் வகித்த 11 தி.மு.க. உறுப்பினர்களில் 7உறுப்பினர்கள் மீண்டும் போட்டியிடுள்ளார்கள்.

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த கலைக்கப்பட்ட 2 மக்களவை உறுப்பினர்களில் ஒரே ஒருவர் தான் மீண்டும் இத் தேர்தலில் காங்கிரஸ் கட்சிசார்பில் போட்டியிடுள்ளார்.

இதே போல் பா.ம.கவின் கலைக்கப்பட்ட 5 மக்களவை உறுப்பினர்களில் இருவர் தான் இம் முறையும் போட்டியிட்டுள்ளார்கள்.

மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் ஒரே உறுப்பினர் களத்தில் இறங்கியுள்ளார். (து)


## இந்தியச் செய்திகள்

# தமிழ் நாட்டில் தி-மு-க. கூட்டணிக்கு வெற்றிவாய்ப்பு

ஜெயலலிதாவின் ஆட்சியைக் கடுமையாக விமர்சித்து வந்ததுடன், தனது ரசிகர்கள், ஆதரவாளர்களை ஜெயலலிதாவுக் கெதிராகப் போர்க்கொடி உயர்த்தும்படி பல வருடங்கள் பணித்துவந்த ரஜனிகாந்த் திடீரென பல்டியடித்து, டாக்டர் ராமதாசுடன் ஏற்பட்ட தனிப்பட்ட தகராறை, தமிழ் நாட்டின் பொதுப் பிரச்சினையாக மாற்றி தனது ஆதரவை ஜெயலலிதாவுடன் கூட்டணியமைத்த பாரதிய ஜனதாக் கட்சிக்கு வழங்கியதுடன், தனது ரசிகர்களையும் ஜெயலலிதாவை ஆதரிக்கும்படி அறிவிப்பு விடுத்திருந்தார்.

ஏற்கனவே ஜெயலலிதா வெற்றி பெறுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட சில தொகுதிகளிலும் தற்போது தி.மு.க.கூட்டணி வெற்றிபெறும் வாய்ப்பு உருவாகியுள்ளதாகவும் இதற்கு ரஜனியின் அறிவிப்பே காரணம் என்றும் அவதானிகள் கருத்துக் கூறியுள்ளார்கள்.

இதற்கிடையில் தற்போது வெளியாகியுள்ள நம்பத் தகுந்த ஜோதிட ஆருடத்தின்படி, தி.மு.க. கூட்டணி 30 இடங்களையும், அ.இ. அ.தி.மு.க. 9 இடங்களையும் பெறுமென்று கருத்து வெளியாகியுள்ளது.மக்களவைத் தேர்தலுக்கு பின்னர்,மத்தியில் பாரதிய ஜனதாக் கட்சி,உதிரிக் கட்சிகளின் உதவியுடன் ஆட்சியமைக்குமென்றும், எனினும் 2006ஆம் ஆண்டில் இதன்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டு, அதன்பின்னர் காங்கிரஸ் கட்சி ஆட்சிபீடம் ஏறும் என்றும் இந்த ஜோதிடர் கருத்து கூறியுள்ளார். (து)



14ஆவது மக்களவைத் தேர்தலின் இறுதிக்கட்ட வாக்களிப்பின் போது இந்தியக் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் ஜனாதிபதி மாளிகைக்கு அருகேயுள்ள வாக்குச்சர்வடியில் நேற்றுக் காலை வாக்களித்தார்.

# தில்லு முல்லுகள் செய்யாத மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள்

(சென்னை)

14 ஆவது மக்களவைத் தேர்தலில் மின்னணு வாக்கப் பதிவு இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டதால் சுமார் 8 ஆயிரம் மெற்றிக் தொன் காகிதம் மிச்சப்படுத்தப் பட்டுள்ளது.

சென்ற மக்களவைத் தேர்தலின் போது 8 ஆயிரம் மெற்றிக்தொன் காகிதம் பயன்படுத்தப்பட்டது.

தேர்தலுக்குப் பயன்படுத்தப்படும் வாக்குச் சீட்டுக்களைத் தயாரிக்க இவ்வளவு தெகையான காகிதம் தேவைப்பட்டது.



மும்பையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த அமெரிக்க நிறுவனத்தின் குளுகுளு கண்ணாடி விற்பனைத் தொடக்க விழாவில் ,கண்ணாடியை அணிந்து ஓய்யாரமாக் காட்சியளிக்கும் நடிகை நடாஷா

ஆனால் தற்போது வாக்குப் பதிவுக்கு மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டதால் காகிதங்கள் மிச்சப்படுத்தப் பட்டுள்ளது.

நாடு முழுவதும் இத் தேர்தலில் 10 இலட்சத்து 75 ஆயிரம் மின்னணு வாக்குப் பதிவு இயந் திரங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.

மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் வாங்குவதற்கு ஆரம்ப கட்டத்தில் கூடுதலாக முதலீடு செய்ய வேண்டியிருந் தாலும் இவை தேர்தலை நடத்த பல வழிகளிலும் உதவியாக இருந்தன..

மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் வந்து விட்டதால், இலட்சக்கணக்கான வாக்குச் சீட்டுக்கள் அச்சிடத் தேவையில்லை என்பதோடு, வாக்குச் சீட்டுகளைப் பெரிய வாக்குப் பெட்டிகளில் வைத்து நாடு முழுவதும் எடுத்துச் செல்ல வேண்டிய அவசியமுமில்லை. இதனால் தேர்தல் பணி பளு குறைந்துள் ளது.

மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் சிறியதாகவும் எடை குறைவாகவும் கையில் எடுத்துச் செல்லக் கூடிய வகையில் இருப்பதாலும் இதை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்துக்குக் கொண்டு செல்வது எளிது.

மின்னணு வாக்குப்பதிவு இயந் திரங்கள் பயன்படுத்தப் படடதால் வாக்குச்சாவடிகளின் எண்ணிக்கையும் குறைந்துள்ளதோடு, வாக்குப் பதிவு பணிக்குத் தேவைப்படும் பணியாளர்களின் எண்ணிக்கையும் குறைந்துள்ளது.

ஒருவாக்குப்பதிவு இயந்திரத்தில் 3ஆயிரத்து 840 வாக்குகளை பதிவு செய்ய முடியும்.6 வால்ட் பற்றறிகள் மூலம் வாக்குப் பதிவு இயந்திரங்கள் செயற்பட முடியும் என்பதால், மின்சாரம் இல்லாத இடங்களிற் கூட இவற்றைப் பயன்படுத்த முடியும்.

64 வேட்பாளர்கள் வரையில்தான் மின்னணு வாக்குப் பதிவு இயந் திரங்களில் பதிவு செய்ய முடியும். அதற்கு மேல் வேட்பாளர்களின் எண்ணிக்கை இருந்தால்,இவற்றைப் பயன்படுத்த முடியாது.

வாக்குப் பதிவு முடிந்தவுடன் தேர்தல் அதிகாரி வாக்குப்பதிவு முடிந்ததற்கான பொத்தானை அழுத் தினால் மேற்கொண்டு வாக்குப்பதிவு செய்ய முடியாது என்பது இதிலுள்ள சிறப்பு அம்சம். (து)

# இந்திய முன்னாள் படைவீரர் நேபாளத்தில் படுகொலை

(காத்மண்டு)

இந்திய முன்னாள் படை வீரர் தேவ் பகதூர் ஹமல், நேபாளத்தில் மாவோ தீவிரவாதிகளால் படுகொலை செய்யப்பட்டுள்ளார். இத் தகவலை காத்மாண்டில் உள்ள இந்தியத் தூதரகம் கடந்த ஞாயிற்றுக்கிழமை வெளியிட்டுள்ளது.

இந்திய இராணுத்தில் கூர்க்கா துப்பாக்கிப் படைப்பிரிவில் கப்டனாகப் பணிபுரிந்தவர் தேவ் பகதூர்.3 யுத்தங்களிலும் தீவிரவாதிகளுக்கு எதிரான பல நடவடிக்கைகளிலும் அவர் பங்கெடுத்துள்ளார். பணியிலிருந்து ஓய்வுபெற்ற பின்,நேபாளத்தில் சமூக சேவையில் ஈடுபட்டுவந்தார்.

நேபாளத்தின் பர்வத மாவட்டம், கிஜ்யான் கிராமத்தில் கடந்த 3ஆம்திகதி இவரை மாவே தீவிரவாதிகள் கொலை செய்துவிட்டனர் என்று இந்தியத் தூதரக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (உ)

யாதானும் நாடாமல் ஊராமல் என்னொருவன்
சாந்துணையுங் கல்லாதவாறு -குறள்

வலம்புரி

## நிலையான கல்விக் கொள்கை வேண்டும்

ஜனநாயகம் என்பது மக்களால் மக்களுக்காக தெரிவு செய்யப்பட்ட மக்களாட்சி என வரைவிலக்கணம் கூறப்பட்டது.

மக்களாட்சி பல்வேறு வழிகளிலும், அனுகூலம் பயப்பதாக இருந்தபோதிலும், அங்கு இருக்கக் கூடிய பிரதிகூலங்கள் நாட்டின் அபிவிருத்திக்கும் கொள்கைத் திட்டமிடலுக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி விடுகின்றது. இதன் காரணமாகவே அபிவிருத்தி அடைந்த நாடுகள் ஜனநாயகத்தின் பெயரால் கீழ்நோக்கிச் செல்கின்றதெனலாம்.

இத்தகைய பரிதாப நிலைக்கு இலங்கை மட்டும் விதிவிலக்கல்ல. குறிப்பாக இலங்கையின் கல்விக் கொள்கையை எடுத்துக்கொண்டால், காலத்துக்குக்காலம் மாறிவரும் ஆட்சியாளர்கள் ஆட்சிப் பீடம் ஏறியதும் கைவைப்பது கல்விக்கொள்கையாகவே இருக்கின்றது.

தமது கட்சிக்கொள்கையை அடிப்படையாகக்கொண்டு கல்விக் கொள்கையில் மாற்றங்களைச் செய்வதால் மாணவர்களும், ஆசிரியர்களும் பெரும் குழப்பமடைவதுடன் கல்விச் செயற்பாட்டில் பற்றுறுதியற்றவர்களாகவும் காணப்படுகின்றனர்.

இதன்காரணமாக இலங்கை நாட்டுக்கல்வியால் தரமான மனித மூலதனத்தை உருவாக்க முடியாதுள்ளது. வெறும் ஏட்டுக்கல்வியை மையமாகவைத்துக்கொண்டு பரீட்சை என்ற எழுத்துமூலமான அளவுகோல் கணிப்பீட்டால, தொழில் நுட்ப அறிவுசார் மாணவர்கள் கல்விப்புலத்திலிருந்து வெளியேற்றப் படுகின்றனர்.

எந்த மாணவன் மனப்பாடம் செய்ய வல்லவனாக இருக்கின்றானோ அவனே பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெற்றுக்கொள்கின்றான். மனப்பாடம் செய்யமுடியாத மாணவன் கலவியைத் தொடர முடியாத ஓர் இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டு விடுகின்றது. இதுவே இலங்கையின் கல்வி முறையாக இருப்பதால் தொழில்நுட்பம், அறிவியல், விஞ்ஞானம் போன்ற துறைகள் மிக வீழ்ச்சி நிலையில் இருப்பதைக்காண முடிகின்றது.

நிலைமை இவ்வாறாக இருக்கும் போது கல்விக் கொள்கையில் மாற்றம் செய்யப் போவதாகவும், இந்த மாற்றம் மிக விரைவில் அமுலாக்கப்படும் எனவும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்துள்ளார்.

கல்விக் கொள்கையை உடனடியாக வகுத்து அதனை உடனடியாக அமுலுக்குக் கொண்டுவரும் முறைமை இலங்கையில் மட்டுமே இருக்க முடியும். ஓர் திட்டத்தை அமுல்படுத்துவதாயின் அதனால் ஏற்படக்கூடிய சாதக, பாதக விளைவுகளை ஆராய்ந்து அதனை அமுல்படுத்துவதில் இருக்கக்கூடிய தேவைப் பாடுகளைத் தெரிந்து கொண்டே அத்திட்டத்தை அமுல்படுத்த முற்பட வேண்டும். இதனை விடுத்து எடுத்த எடுப்பில் ஓர் திட்டத்தை அமுல்படுத்துவதும், பின்னர் அதனை மாற்றுவதும் மிகப்பெரும் நிதியையும், மனித உழைப்பையும் வீணடிப்பதாக இருக்கும்.

அரசின் கல்விக் கொள்கைகள் ஓர் திட்டமிட்ட அடிப்படையில் முன்னெடுக்கப்படவில்லை என்பதற்கு க.பொ.த உயர்தர மாணவர்களுக்கென அறிமுகப்படுத்தப்பட்ட மாணவர் ப்திவேடும், கணிப்பீட்டுத் திட்டமும் நல்லதோர் உதாரணமாகும்.

அதாவது ஒவ்வொரு வருடமும், மாணவர்பதிவேட்டில் மாற்றங்கள் செய்யப்படுவதுடன், கணிப்பீடுகளின் எண்ணிக்கை - கணிப்பீட்டு வகை என்பனவற்றிலும் மாற்றங்கள்அடிக்கடி இடம்பெறுகின்றன. இதனால் மாணவர்கள் அவற்றின் மீது நம்பிக்கையற்றவர்களாக இருப்பதுடன் அதில் கரிசனை காட்டவும் தவறுகின்றனர்.

எனவே கல்விக்கொள்கை என்பது நாட்டிற்கு உகந்ததாக- நவீன தகவல் தொழில்நுட்பத்திற்கு ஈடுகொடுக்கக்கூடியதாக அமைக்கப்படல் வேண்டும். இது காலத்தின் தேவையாகும்.

# ஊழலற்ற ஆட்சியை நிறுவ புதிய அரசு உறுதி பூண்டுள்ளது

## நிதியமைச்சர் சரத் அமுனுகம

(கொழும்பு)

புதிய அரசாங்கம் நாட்டில் இலஞ்ச ஊழல்களை ஒழித்து மக்கள் ஆதரவிலான ஆட்சி ஒன்றை நிறுவுவதற்கு உறுதி பூண்டிருக்கிறது என நிதியமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.சுயாதீன தொலைக்காட்சி ஒன்றிற்கு அளித்த விசேட பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் இது பற்றித் தெரிவிக்கையில், நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு இலஞ்சமும் ஊழலுமே முக்கிய காரணமாக இருக்கின்றது.

எனவே, இந்த இரண்டு சமூக விரோத செயல்களுக்கு எதிராக கடுமையான சட்டங்கள் அமுல்படுத்தப் படவுள்ளன. இதற்கு சகல மக்களும் பூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டும். இதேவேளை, பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படும் போது வயது வித்தியாசம் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது என்றும் நிதியமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

(உ-60,10)

# நோர்வேயின் அனுசரணையில் ஜே.வி.பிக்கு திருப்தியில்லை

## மீண்டும் இவ்வாரம் ஜனாதிபதியுடன் சந்திப்பு

(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாகத் தமது இறுதி முடிவினை எடுக்கும் முகமாக ஜே.வி.பியினர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை மீண்டும் இவ்வாரம் சந்திக்க வுள்ளனர்.

கடந்த வியாழன் அன்று இடம்பெற்ற ஜனாதிபதியுடனான சந்தப்பின் போது பேச்சுவார்த்தை தொடர்பான இறுதி முடிவு எதுவும் எட்டப்படாத நிலையில் மீண்டும் இச்சந்திப்பு இடம் பெறவுள்ளது.

கடந்த வாரம் இடம்பெற்ற சந்திப்பின் போது, நோர்வேயின் சமாதானப் பங்களிப்பை கடுமையாக விமர்சித்த ஜே.வி.பி, நோர்வே தனது அனுசரணைப் பணிகளுடன் இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதானது கண்டிக்கத்தக்கது எனக் கூறியதுடன், நோர்வேயின் அனுசரணைப் பணிகள், புதிய வேலைத் திட்டத்தின்கீழ் ஆரம்பிக்கப்படல் வேண்டும் என்றும் ஜனாதிபதியிடம் வலியுறுத்தியிருந்தனர்.

எனினும், ஜனாதிபதி சந்திரிகா இது தொடர்பாக மாற்று யோசனைகள் எதனையும் முன்வைக்கவில்லையென்றும், இதனையடுத்து அடுத்த சந்திப்புக்குத் திட்டமிட்டிருப்பதாகவும் ஜே.வி.பியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

(ந-121)

# மீண்டும் போர் ஏற்படாது என்பதை உறுதிப்படுத்த எந்தத் திட்டமும் இல்லை

## திருமலை அரசியல் பொறுப்பாளர் எழிலன் எடுத்துரைப்பு

(திருகோணமலை)

நாட்டில் மீண்டும் போர் வராது என்பதனை உறுதிசெய்வதற்கான எந்தவொரு திட்டமும் எவரிடமும் இல்லை. தற்போது யுத்தம் தற்காலிகமாக மட்டுமே இடைநிறுத்தப்பட்டுள்ளது என திருகோணமலை மாவட்டத்திற்குப் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சி. எழிலன் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை மாவட்டத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே எழிலன் இதனைத் தெரிவித்தார்.

இசசந்திப்பானது புதிய அரசியல் பொறுப்பாளரை அறிமுகம் செய்து வைக்கும் நிகழ்வாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. முன்னாள் அரசியல் துறைப் பொறுப்பாளர் திலக் தலை மையில் இச் சந்திப்பு இடம்பெற்றது.

புதிய அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன் மேலும் அங்கு கருத்துத் தெரிவிக்கையில்,

விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இணைந்து கொண்ட சிறுவர்களை புலிகள் அமைப்பிலிருந்து பறிப்பதிலேயே யுனிசெவ் நிறுவனம் குறிப்பாக இருக்கின்றதே தவிர அவர்களுக்கான எந்தவொரு வாழ்வோதயத் திட்டத்தையும் அமுல்படுத்தவில்லை. 18 வயதுக்குக் குறைந்த சிறியவர்களை போராட்டத்திற்கு அழைப்பதில் விடுதலைப் புலிகளுக்கு உடன்பாடுஇல்லை. ஆனால் அவர்கள் தமது குடும்பப் பொருளாதார சூழ்நிலை மற்றும் இராணுவ அச்சம், போராட்ட உத்வேகம் ஆகிய காரணங்களுக்காக எமது அமைப்பில் இணைகின்றனர்.

அவர்களை நல்வழிப்படுத்தி சரியான பாதைக்கு இட்டுச செல்வது விடுதலைப்புலிகள் அமைப்பின் கடமையாகும. வயது என்பது ஒரு பிரச்சினையில்லை. விடுதலைபபோராட்டத்திற்கு வயது ஒரு தடையல்ல. என்ன காரணத்திற்காக சிறுவர்கள் இணைந்து போராட்டத்தில் ஈடுபட முன் வந்துள்ளார்கள் என்பது பற்றி சிந்திக்க வேண்டும்.

சிறுவர்கள் போராட வேண்டிய தேவை வராத நிலை பற்றிப் பார்க்க வேண்டும் என்றார்.

எம்மோடு ஒன்றிணைந்து ஊடகங்கள் நிறைய பங்களிப்புச் செய்துள்ளன. விடுதலைப் போராட்டம் பற்றி வெளியுலகத்திற்கு கொண்டு வந்தவை இவ் ஊடகங்களே ஆகும் போராளியின அர்ப்பணிப்பு தியாகம் பற்றி சக போராளிகளுக்குத் தெரியுமே தவிர வெளியுலகத்திற்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை. இவை பற்றி மற்றவர் களுக்கு தெரியப்படுத்தியவைகள் ஊடகங்களே. கிழக்கு மாகாணத்தில் அண்மையில் தோன்றிய நிலைமை பற்றி மத்தியில் இருந்த குழப்பத்தைத் தீர்த்து வைத்தவை ஊடக ங்களே. மட்டக்களப்பு மாவட்டத்தில் தோன்றியுள்ள நிலை மைகள் துரதிர்ஷ்டமானவை இவை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். தொடர்ந்தும் போராளிகளை இழக்கமுடியாது.

யுத்தத்தின் போதும் விடுதலைப் புலிகள் போராளிகளை இழந்தார்கள்.சமாதானத்தின் போதும் போராளிகளை இழந்து கொண்டிருக்கிறார்கள். இச் சம்பவங்களுக்கு அரசாங்கமே முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும். அவர்களே இதற்கான தீர்வைக் கொடுக்க வேண்டுமென எழிலன் மேலும் தெரிவித்தார்.

(உ-121)

### தினசரி தியானம்

ௐ

### விவேகச் சிந்தனைகள்

பன்னெடுங்காலமாக ஒவ்வோர் இதயத்திலும் எழுந்து வருகின்ற கூக் குரலைக் கவனித்துள்ளீர்களா? நாம் வறுமையினால் ஏமாற்றப்படுகிறோம். நாம் பணக்காரர்களாகறோம. பணத்தால் ஏமாற்றப்படுகிறோம். நாம் அறிவிலிகள் எனவே படிக்கிறோம். ஆனால் அதுவும் நம்மை ஏமாற்றி விடுகிறது. ஒருவரும் ஒருபோதும் திருப்தியடைவதில் லை. அது தான் துன்பத்தின் காரணம்.

சுவாமி விவேகானந்தர்.

## புனரமைப்பு

(பருத்தித்துறை)

யுத்த அனர்த்தங்களினால் சேதமடைந்திருந்த இடைக்காடு மகாவித்தியாலய ஆரம்பப்பிரிவு வகுப்பறைக் கட்டிடங்களை ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் சுமார் 20 இலட்சம் ரூபா செலவில் புனரமைத்து வழங்கியுள்ளது.

புனரமைக்கப்பட்ட வகுப்பறைக் கட்டடத் திறப்புவிழா அதிபர் எஸ்.சித்திரவடிவேல் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவன இணைப் பதிகாரி எஸ்.மைக்கல் வில்லகே கட்டடத்தைத் திறந்து வைத்தார்.

(உ-52)

# தமிழ் நாட்டிலுள்ள மூவாயிரம் அகதிகள் நாடு திரும்ப விருப்பம்

(சென்னை)

தமிழ் நாட்டில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்கள் மூவாயிரம் பேர் மீண்டும் இலங்கைக்குத் திரும்ப விருப்பம் தெரிவித்துள்ளனர். இந்தத் தகவலை இந்தியாவிற்கான இலஙகையின் உதவி ஸ்தானிகர் சுமித் நாகநதலா வெளியிட்டுள்ளார்.

இந்தியாவில் தற்சமயம் ஒன்றரை இலட்சம் இலங்கைத் தமிழ் அகதிகள் தங்கியுள்ளனர்.இவர்களில் வன்னி, யாழ்ப்பாணம் மற்றும் மலையகத்தைச் சேர்ந்தவர்கள் உள்ளடங்கியிருப்பதாக அவர் தெரிவித்தார்.

கடந்த வருடம் மாத்திரம் இலங்கை அகதிகளில் சுமார் ஆயிரத்து 500பேர் நாடு திரும்பியதாகக் குறிப்பிட்ட அவர், இவர்களின் மீள் குடியேற்றத்திற்கு அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் அமையம் உதவியளித்ததாகவும் தெரிவித்தார்.

(ந-121)

# உண்ணாவிரதப் போராட்டத்தை மரணதண்டனைக் கைதிகள் கைவிட்டனர்

(கொழும்பு)

வெலிக்கடைச் சிறைச்சாலையில் சாகும்வரை உண்ணாவிரதம மேறகொண்டுவந்த சிறைக்கைதிகள் தங்களது உண்ணாவிரதப் போராட்டத்தை நேற்றுக் கைவிட்டனர்.

கைதிகளின் கோரிக்கைகளுக்கு ஒரு வாரகாலத்திற்குள் தீர்வு பெற்றுத் தருவதாக சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் புறாம் மர்சூத் அளித்த வாக்குறுதிகளை அடுத்தே கைதிகள் தமது போராட்டத்தைக் கைவிட்டுள்ளனர்.

தமக்கு வழங்கப்பட்டுள்ள மரணதண்டனைக்கான தீர்ப்பை ஆயுள் தண்டனையாக மாற்ற வேண்டும் எனக் கோரி கடந்த வெள்ளிக்கிழமை முதல் வெலிக்கடைச் சிறைச்சாலையின் கூரைமேல் அமர்ந்து சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தினை நடத்திவந்த இந்தக்கைதிகளுக்கு, முன்பதாக சிறைச்சாலை அதிகாரிகள் உறுதிமொழிகளை வழங்கிய போதும் அவர்கள் போராட்டத்தைக் கைவிட மறுத்து விட்டனர்.

இதனையடுத்து நேற்றுக்காலை ஆணையாளர் வெலிக்கடைச் சிறைச்சாலைக்குச் சென்று கைதிகளைப் பார்வையிட்டதுடன் அவர்களின் கோரிக்கைகளுக்கு ஒரு வாரகாலத்துக்குள் தீர்வு பெற்றுத் தருவதாக உறுயளித்தார். இதனையடுத்து கைதிகள் தமது போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்துள்ளனர். (உ-61,10)

## சயனைட்...

கொழும்புக்கு அனுப்பிவைக்க ஏற்பாடாகியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை பிரஸ்தாபப் பெண்ணின் கணவர் வெளிநாட்டில் வசிதது வருவதாகவும் இப்பெண்ணுகக்கு கடந்த 5 மாதங்களுககு முன்னரே திருமணம் நடைபெற்றதாகவும் கூறப்படுகின்றது. சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த-4,43,16)

## ஐ.தே.க..

கட்சி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் படி கட்சியின் வாக்காளர் எண்ணிக்கையை அதிகரித்து முன்னோக்கிச் செல்வது, மாகாணசபைத் தேர்தலை எதிர்நோக்குவது, அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றாத சந்தர்ப்பத்திலும் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லாத சந்தர்ப்பங்களிலும் எவ்வாறு நடந்து கொள்வது என்பது குறித்தும் கூடிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை மாகாண சபைத் தேர்தல் பணிகளை மேற்கொள்வதற்காக விஷேட குழுவொன்று பாராளுமன்ற உறுப்பினர் எம்.எச் மொஹமட் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, எதிர்கட்சியின் பிரதான அமைப்பாளராக மஹிந்த சமரசிங்கவின் பெயரை கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க முன்மொழிய அதனை பாராளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே வழிமொழிந்துள்ளார்.

இதேவேளை, எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஐக்கிய தேசியக் கட்சியின் நிறைவேற்றுக்குழு கூடவிருக்கிறது. (த-121)

## சமாதானப்..

முறை மற்றும் யுத்தத்தினால் சீரழிந்து போயுள்ள வடகிழக்கு மாகாண புனர்வாழ்வு, புனர்நிர்மாணப்பணிகள் என்பன தொடர்பாகவும் விரிவாக ஆராயப் படடுள்ளதாக பிரதமர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடனான சந்திப்புத் தொடர்பாகவும், ஜனாதிபதியுடனான சந்திப்புத் தொடர்பாகவும் இப் பேச்சுவார்த்தையில் நோர்வேத் தரபபில் கலந்து கொண்ட வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன்னோ, பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெலிசீனோ உத்தியோக பூர்வமாக எந்த விதமான கருத்தையும் தெரிவிக்கவில்லையென்பதும் குறிப்பிடத்தக்கது. (ம)

நினைவை விட்டகலாத
தந்தையும் அன்னையும்
நினைவு கூருகின்றோம்

மலர்வு 1914 ✻ 07 ✻ 17



உதிர்வு 1980 ✻ 03 ✻ 13

மலர்வு 1917 ✻ 02 ✻ 14



உதிர்வு 2002 ✻ 04 ✻ 03

சுப்பிரமணியம் பரமசாமி பரமசாமி கனகம்மா

திதி:- 11.05.2004

உங்கள் நினைவுகளால் எங்கள்
காலமெல்லாம் கண்ணீரால் கழுவுகின்றோம்
காலம் தான் உங்களைச் சேர்ந்தாலும்
உங்கள் அன்பு நினைவுகள் பசுமையானவை
ஆண்டுகள் பல சென்றாலும் உங்கள்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போம்,
ஐயா,அம்மா என அழைக்க யாருளர்
ஆத்மா சாந்தியடைய இந்நாளில் பிரார்த்திப்போம்,
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

163/2 கண்டி வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்

நினைவோடு பிரார்த்திப்போம்
திரு.திருமதி கனேஸ்வரன் வசந்தி
திரு.ஸ்கந்தராஜ் (நோர்வே)
திரு. திருமதி பால்ராஜ் கோமதி

(7536)

# மதியுரைஞர் பாலாவின் 'விடுதலை' வெளியீடு

(யாழ்ப்பாணம்)

தமிழழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் எழுதிய அரசியல், தத்துவம் சார்ந்த கட்டுரைகளின் தொகுப்பு நூலான 'விடுதலை' வெளியீட்டு விழா எதிர்வரும் 16ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பி.ப 3.30 மணிககு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் தேசியக்கொடியினை யாழ். மாவட்ட மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் செல்வி கலைவிழி ஏற்றிவைப்பார்.

வரவேற்புரையினை நிதர்சனம் பொறுப்பாளர் சேரலாதனும் வெளியீட்டுரையினை தமிழீழக் கலைபண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தின துரையும் நிகழ்த்தவுள்ளனர்.

தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன் நூலை வெளியிட்டுவைக்க, யாழ். பல்கலைக்கழக துணை வேநதர் பேராசிரியர் சு. மோகனதாஸ் அதனைப் பெற்றுக் கொள்வார்.

சிறப்புப் பிரதிகளை தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி. பாப்பா வழங்க, மதிப்பீட்டுரைகளை யாழ். பல்கலைக்கழக மெய்யியற்துறைத் தலைவர் பேராசிரியர் சோ.கிருஷ்ணராஜா, 'தெரதல்' ஆசிரியர் அ. யேசுராசா, விடுதலைப் புலிகளின் அரசியல் பிரமுகர் க.வே. பாலகுமாரன் ஆகியோர் நிகழ்த்துவர். நன்றியுரையினை கலை, பண்பாட்டுக்கழக யாழ் மவ்ப் பொறுப்பாளர் வளநாடன் வழங்கவுள்ளார். (உ)

# இராணுவத்துடன் சந்திப்பு

(வவுனியா)

விடுதலைப்புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல் துறையினருக்கும் வவுனியா மாவட்ட படைததரப்பினருக்கும் இடையே நேற்று முக்கிய சந்திப்பொன்று இடம்பெற்றுது. வவுனியா மாவட்ட போர்நிறுத்த கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் நடைபெற்ற இச் சந்திப்பில் வன்னி மாவட்ட ராணுவத் தளபதி சிசிர விஜயசூரிய, பிரதிப் பொலிஸ் மா அதிபர் மிஸ்கின் மற்றும் கேணல் சேனநாயக்க ஆகியோர் கலந்துகொண்டனர்.

விடுதலைப் புலிகளின் தரப்பில் வவுனியா மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் ஞானவேல், முன்னாள் மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் ஆகியோர் கலந்து கொண்டனர்.வவுனியா மாவட்டத்தில் இது வரை காலமும் போர்நிறுத்தம் எவ்வாறு நடைமுறைப் படுப்பட்டதோ அதேபோன்று இனி வரும் காலங்களிலும் கடைப்பிடிக்கப் போவதாக இருதரப்பு பிரதிநிதிகளும் இணக்கம் கண்டுள்ளனர்.

கடநதகாலங்களில் ராணுவத்தினரும் பொலிசாரும் ஒத்துழைப்பு வழங்கியது போனறு புதிய பொறுபபாளராக நியமிக்கப் பட்டுள்ள ஞானவேலுவிற்கும ஒத்துழைப்பு வழங்க வேணடும் என முன்னாள் அரசியற் துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் கேட்டுக் கொண்டார். (த-121)

## செய்தியில் தவறு

(யாழ்ப்பாணம்)

கலைஞர், ஸ்ராலின், வை.கோ கைது என வலம்புரியின் முன் பக்கத்தில் நேற்று வெளியான செய்தி தவறானதாகும்.

கலைஞர், ஸ்ராலின், வை.கோ கைது என இந்திய இணையத் தளம் ஒன்று நேற்று முன்தினம் இரவு பரபரப்பான இச் செய்தியை வெளியிட்டது.

எனினும் இச் செய்தி பின்னர் இணையத்தளத்திலிருந்து நீக்கப்பட்டிருந்தது.

குறித்த இணையத் தளத்தின் ஆதாரத்துடன் வலம்புரியில் பிரசுரிக்கப்பட்ட பிரஸ்தாப செயதியில் ஏற்பட்ட தவறுக்காக வருந்துகிறோம். (ஆ-ர்)

## நோர்வே....

வன்னி வந்தடைந்துள்ள விடுதலைப புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும் இச் சந்திப்பில் கலந்து கொள்வார். இவ் ஆலோசனைகளின் போது சமாதான பேச்சு வார்த்தைகள் விடுதலைப் புலிகளுடன் மட்டுமே நடத்தப்படவேண்டும் என்றும் கடந்த அரசாங்கத்திடம விடுதலைப் புலிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட தன்னாட்சி அதிகாரம் கொண்ட இடைககால நிர்வாக சபையின் அடிப்படையிலேயே பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற தமது நிலைப்பாட்டையும் நோரவே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன்னிடம் விடுதலைப் புலிகள் வலியுறுதத்தி கூறுவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது (ம)

## மட்டு...

குறித்தே முக்கியமாக பேச்சுக்களில் ஆராயப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கிழக்கு மாகாணத்தில் அண்மைக்காலமாக இடம் பெற்றுவரும் விடுதலைப் புலிகளிள் மீதான தாக்குதல்கள் குறித்து விடுதலைப் புலிகளின் தலைமை கடும் தொனியில் எச்சரிக்கை விடுத்திருக்கும் நிலையில் இச்சந்திப்பு நடைபெறவுளளமை குறிப்பிடத்தக்கது. (த-121)

## படையினர்..

வாகனச் சோதனைகளையும் நடத்தி வருகின்றனர்.

இதேவேளை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசததில் இருந்து படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு வரும் மக்களும் தீவிர சோதனை களுக்குள்ளாக்கபபடுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச)

## கொலையாளிகளுக்கு..

களாகவே இந்தக் கொலைகள் இடம் பெற்றிருக்கின்றன.

இதனால் இந்தக் கொலைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டியது மிக முக்கியமானதாகும். இத்தகைய கொலைகளின் சூத்திரதாரிகளை மூடி மறைப்பது உட்பட எந்தவொரு விதத்திலும் ஆதரவு வழங்குவது குற்றமாகும் என்றும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுததலைவர் கூறியிருக்கிறார்.

புலி உறுப்பினர்கள் இருவர் மட்டக்களப்பு இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில வைததுச் சுட்டுக் கொல்லப்பட்டமையின் எதிரொலியாக புலிகளினால் நேற்று முன்தினம் கடும் எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. (த-121)

யாழ்ப்பாணத்தில் 72 வருடகால அனுபவம் பெற்ற மதுபான விற்பனையாளர்கள் மீண்டும் வாடிக்கையாளர் நலன் கருதி
243 கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்
எனும் முகவரியில் விற்பனையை ஆரம்பித்துள்ளார்கள்
உள்நாட்டு வெளிநாட்டு மதுபான வகைகளை பெற்றுக் கொள்ள நாடுங்கள்



ஆ.வேலுப்பிள்ளை அன் சன்ஸ்
243 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
ஸ்தாபிதம் - 1932
(சி-7352)

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.05.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.